விலை : 20.00
ப்க்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 24 புதன்கிழமை (07.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 139

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# திருமலையில் நேற்று பாரிய தேடுதல் வேட்டை

## ஆயுததாரிகளின் நடமாட்டம் காணப்பட்டதாம்

(திருகோணமலை)

**திருகோணமலை ஈச்சிலம்பத்தை பிரதேசத்திலுள்ள கடலோர கிராமங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து பாரிய கூட்டுத் தேடுதல் நடவடிக்கையொன்றில் ஈடுபட்டனர்.**

அந்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை ரி-56 ரக துப்பாக்கி மீட்பு மற்றும் சந்தேகத் திற்குரிய இருவரது நடமாட்டம் அவதானிக்கப்பட்டதையடுத்தே இந்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஈச்சிலம்பத்தை பிரதேசத்திலுள்ள கடலோர கிராமங்களான

20 ஆம் பக்கம் பார்க்க..


கோப்புப்படம்

## யானையுடன் மோதி ரயில் விபத்துக்குள்ளானது

### சொகுசு ரயிலில் வந்தோர் திண்டாட்டம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பளைநோக்கிப் புறப்பட்ட சொகுசு ரயில் பனிச்சன்குளம் பகுதியில் யானையுடன் மோதி விபத்துக்குள்ளானது.

சம்பவம் நேற்றிரவு 8.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் யானை உயிரிழந்ததுடன் ரயிலின் முன்பக்கத்திலிருந்த பிரதான மின்குமிழ்களும் சேதமடைந்தன.

இதனால்மேலதிகமாக பயணத்தை தொடர முடியாத ரயில் மாங்குளத

19 ஆம் பக்கம் பார்க்க..

## தென்னாபிரிக்கத் தூதுவரின் இலங்கைப் பயணம் தாமதம்

(கொழும்பு)

இலங்கைக்கான தென்னாபிரிக்காவின் சிறப்புத் தூதுவர் சிறில் ராமபோசாவின் கொழும்புப் பயணம் மேலும் தாமதமடையலாம் என்று இராஜதந்திர, வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வைக் காணபதற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுவதற்காக இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத தொடக்கத்தில் சிறில் ராமபோசா கொழும்பு செல்வார என முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், இவரின் இலங்

20 ஆம் பக்கம் பார்க்க..

வெளிநாடு செல்வதற்காக பணத்தைக் கொடுத்து ஏமாந்துபோனீர்களா?



எம்மிடம் எந்தவொரு நாட்டுக்குமான Student Visa / Work Permit/ Skilled Migration/PR/Visit Visa/Visa Rejection Appeal சேவைக்கும்
கட்டம் கட்டமாகவே கட்டணங்களைச் செலுத்தலாம்

ஆரம்பக் கட்டணம் செலுத்தியதுமே
பல்கலைக்கழக/ தொழில் அனுமதி கடிதம்(Offer Letter)

விசா கொடுப்பனவு செய்த 3 மாதத்தில்
விசா அனுமதி & தொழில் உடன்படிக்கை
(Visa & Job Contract)

விசா கையில் கிடைத்ததும் மிகுதிக் கட்டணத்தை
பல்கலைக்கழகம் / கல்லூரி / தொழில் நிறுவனத்துக்கு நேரடியாகவே செலுத்தலாம்

ஒவ்வொரு படிநிலையிலும் உத்தியோகபூர்வமாக அந்தந்த நாடுகளின் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உத்தரவாத கடிதத்தைப் பெற்று அச்சமின்றிக் கட்டணத்தைச் செலுத்துங்கள்.

சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி,
இல.153, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Sikaram

மேலதிக விபரங்களுக்கு:
www.sikaram.lk
தொலைபேசி: 077 36 [illegible]

(C-7290)

## தாழமுக்கம் தொடரும் !

(கொழும்பு)

கடந்த சில நாட்களாக இலங்கைக்கு அண்மையில் வளிமண்டலத்தில் காணப்பட்ட வளிமண்டலக் குழப்பமானது நேற்றுக்காலை தாழமுக்க பிரதேசமாக வலுவடைந்தது. அது இலங்கைக்கு மேற்காக தற்போதும் காணப்படுகிறது.

பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் நாட்டின் அனேகமான பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை காணப்படும்.

அத்துடன் மேற்கு, சப்ரகமுவ, தெற்கு, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளைகளிலும் மழை காணப்படும். இடியுடன்கூடிய மழை

20 ஆம் பக்கம் பார்க்க..

## தாவடியில் குண்டுகள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

தாவடி தெற்கு பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள பாவனையற்ற காணியில்

20 ஆம் பக்கம் பார்க்க..

## இராணுவக் குடியேற்றத்தை தடுக்கக் கோரி மகஜர்

(கொழும்பு)

இராணுவத்தினரால் முன்னெடுகப்பட்டுவரும் குடியேற்ற நடவடிக்கைகளைத்தடுத்து நிறுத்தி எங்களை எங்களுடைய சொந்த காணிகளில மீள்குடியேற்றுங்கள் என்று கோரிக்கைவிடுத்து வளலாய் வடக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளித்துள்ள்னர்.

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வளலாய் வடக்குப் பகுதியிலிருந்து கடந்த 1990 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த 120 குடும்பங்களைச்சேர்ந்தவர்களே இந்த மகஜரை நேற்று முன்தினம் கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபனிடம் கையளித்துள்ளனர்.

இதேவேளை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வலி.வடக்கு மீள்குடியேற்ற குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கத்தடமும் இந்த மகஜரின் பிரதிகளைக் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில், வளலாய் வடக்கு பகுதியிலிருந்து கடந்த 1990 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த நாம் இன்று வரை சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாமல் அந்தரித்து வருகின்றோம். எமது சொந்த இடங்களிலிருந்து இடம பெயர்ந்த நாங்கள் கரவெட்டி, திக்கம், பருத்தித்துறை, தொண்டமனாறு,

19 ஆம் பக்கம் பார்க்க..

## பல்கலைக் கழகம் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகம் எதிர் வரும் 13ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை மூடப்படுவதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்வசந்தி அரசரட்ணம் தெரி

19 ஆம் பக்கம் பார்க்க..

# மனிதவுரிமைப் பணியகத்துடன் ஒத்துழைக்க முடியாது!

## ஜனாதிபதி திட்டவட்டம்

(கொழும்பு)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன் ஒத்துழைகக மாறு அரசாங்கத்துடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ள சில அமைப்புகள்விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ நிராகரித்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவை கடந்த வாரம் தனித்தனியாகச் சந்தித்த இந்த அமைப்புகள், ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர் மானத்தின் விளைவாக தோன்றக் கூடிய சூழ்நிலைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளன.

இதன்போது, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன் ஒத்துழைப்பதன் மூலம் சர்வதேச விசாரணைக்கான அழுத்தங்களைக் குறைக்க முடியும் என இவ்வமைப்புகள் ஆலோசனை

20 ஆம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## பல்கலைக்கழக அனுமதி - 2013/2014
## உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)
## மொழி பெயர்ப்பு கற்கை நெறி

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 23.05.2014 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகள்**

**அனுமதிக்கான தகைமைகள்**

மொழிபெயர்ப்பு கற்கை நெறியைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2013/2014 கைநூல் 3.2.1 3.2.2 8.1.9 க்கு அமைய தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் உளச்சார் பரீட்சைக்கு (Aptitude Test) தோற்றுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா 150 ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக்கணக்கு இல.162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ/த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச.மீ அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 23.05.2014 ஆம் திகதிக்கு முன்னதா உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021222 6714

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 06.05.2014

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
### கலைப்பீடம்
### பல்கலைக்கழக அனுமதி - 2013/2014
### மொழி பெயர்ப்பு கற்கை நெறி
### தகுதி காண் பரீட்சைக்கான விண்ணப்படிவம் (Aptitude Test)

01. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :-
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)

முதல் எழுத்துக் குறிக்கும் பெயர் :-

தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :-

தொலைபேசி இலக்கம் :- மின்னஞ்சல் முகவரி :-

க.பொ.த (உ.த) பரீட்சைப் பெறுபேறு 2013 :-
சுட்டிலக்கம் : Z புள்ளி : பொதுச்சாதாரண பரீட்சைப்புள்ளி :

| பாடம் | தரம் | மொழி மூலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

02. பெற்றோர் பாதுகாவலர் பெயர் :-
முகவரி : (ஆங்கிலத்தில்):-

சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :
1. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு
2. உறுதிப்படுத்திய 2013 க.பொ.த (உ.த) பரீட்சைப் பெறுபேற்றுச்சான்றிதழ் (Z புள்ளி/மாவட்டம் உள்ளடங்கலாக)
3. பெயர் மாற்றம் செய்யின் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம்

(சி-7296)

என்னால் தரப்பட்ட மேற்படி விபரங்கள் யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி பதவி முத்திரை பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான் கையொப்பம்

# முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் விசேட வழிபாட்டிற்கு ஏற்பாடு
## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தன்று வடக்கில் விசேட வழிபாடுகளை மேற்கொள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாகவும் எத்தகைய தடைகள் வந்தாலும் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படும் என்று வடக்கு மாகாணசபையின் ஆளும்கட்சி உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை தமிழர்கள் அனுஷ்டிக்க கூடாது என்பதற்காக பல தடைகளை இராணுவத்தின் ஊடாக இந்த அரசாங்கம் ஏற்படுத்தி வருகின்றது. முள்ளிவாய்க்கால் நினைவு தினம் உலகெங்கிலும் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அனுஷ்டித்து விடுவார்களோ என்ற அச்சத்தில் பல்கலைக்கழகத்திற்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் அழிக்கப்பட்ட நாளை தமிழினம் எவ்வாறு எளிதில் மறந்து விடும். அந்நாளை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க தாயகத்திலும் புலம் பெயர்தமிழர்களினாலும் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரும் நிலையில் இவ்வாறான அடக்கு முறைகளை அரசாங்கம் பிரயோகித்து வருகின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை தமிழர்கள் மறக்க நேரிட்டாலும் இந்த அரசாங்கம் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அனுஷ்டிக்க தூண்டும் என்பதில் சந்தேகமில்லை. அடக்குமுறைகள் மூலம் மக்களின உணர்வுகளை கட்டுப்படுத்த அரசு எடுக்கும் ஒவ்வொரு முயற்சிகளும் தோல்வியில்தான் சென்று முடியும்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை இந்துக்கோவில்களிலோ, கிறிஸ்தவ தேவாலயங்களிலோ இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வழிபாடுகளையும தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஏற்பாடு செய்யும். எங்கு இந்தப் பிரார்த்தனைகள் நடத்ப்படும் என்பதை பின்னர் அறிவிப்போம்.

அடக்கு முறைகளைக்கண்டுநாம்ஒருபோதும அஞ்சிவிடமாட்டோம். உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செய்வதையாரும் தடுத்து விடவும் முடியாது என்று அவர் தெரிவித்தார். (எ-6)

# பல்கலைக்கழகத்தில் எச்சரிக்கை சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களிற்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பல்கலை வளாகத்தினுள் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளது.

இதனால் நேற்று முழுவதும் அங்கு பதற்றத்துடன் கூடிய சூழ்நிலையே காணப்பட்டது.

அத்துண்டுப் பிரசுரத்தில்,

விடுதலைப்புலிகளிற்கு எதிரான யுத்தம் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் மகிழ்ச்சியாக் முடிவடைய போகின்ற நிலையில் மீண்டும் பயங்கரவாதம் இந்நாட்டில் தலைதூக்க ஒரு போதும் இடமளிக்க முடியாது.

ஆனால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு தூபம் இடுவதும் அவர்களின் கொள்கைகளை பின்பற்றியும் வருகின்றமை எமக்கு வேதனை அளிக்கின்றது. இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளால் நாமும் நம் தேசமும் எத்தனையோ கொடூரங்களை சந்தித்தோம் என்று இந்த உலகமே நன்றாக அறியும்.

எனவே பல்கலைக்கழகத்தில் மீண்டும் புலிகளை புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிய முடிகின்றது.

அவ்வாறான செயற்பாடுகளை தூண்டும் பேராசிரியர்கள், மாணவர் ஒன்றியத் தலைவர்களை நீண்டகாலமாக அவதானித்து வந்ததுடன் அவர்களுக்கு நேரடியாக எச்சரிக்கையும் செய்தோம்.

ஆனால் அது பலன் அளிக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் அவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்துக் கொண்டு தான் செல்கிறது.

பேராசிரியர்களின் வழிநடத்தல்களின் கீழ்த்தான் மாணவர் ஒன்றியங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு துணை போவதாக நாங்கள் அறிகின்றோம் அவர்களுக்கு நாங்கள் இறுதியானதொரு எச்சரிக்கை விடுகின்றோம்.

இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மூவின மக்களும் கல்வி கற்றுவரும் நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்க ஒரு போதும் அனுமதி வழங்கப்பட மாட்டாது. எனவே போராசிரியர்களே! மாணவர் ஒன்றியத் தலைவர்களே! உங்களுக்கு நாங்கள் விடும் எச்சரிக்கையாக இதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் உங்களுக்கு உயிருக்கு நாங்கள் உத்தரவாதம் வழங்க முடியாது. ஒரே நாடு ஒரே மக்கள்.

என அதில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இதற்கு நாட்டைக் காக்கும் மாணவர் படை எனவும் உரிமை கோரப்பட்டுள்ளது.

(எ-4)


**பிள்ளையார் இன்**

எமது உணவகத்தில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு தரமான சைவ, அசைவ உணவுகள் நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன. **விசேடமான உணவுகளான**

மசாலா தோசை - 150/=மட்டுமே. பேப்பர் தோசை, வெங்காய தோசை, நெய்த் தோசை - 120/= மட்டுமே. பூரி, சப்பாத்தி - 100/ மட்டுமே. தினமும் மாலை 6 மணிமுதல் 10 மணிவரை விசேட உணவுகளான மரக்கறி புரியாணி, பிறைட் றைஸ், சிக்கின் புரியாணி, சிக்கின் பிறைட் றைஸ் என்பன விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம். (சி-7274)

இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0212222829

# மரண அறிவித்தல்



## S.K.சிவலிங்கம்

(ஓய்வு பெற்ற கிராம அலுவலகரும், ஸ்ரீ அம்மா பகவான் – சுவர்ணயுக ஆலய வளர்ச்சிக்கு முன்னின்றவரும்)
[சுழிபுரம் மேற்கு]

காரைநகரைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட S.K.சிவலிங்கம் 06.05. 2014 நேற்று செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.


அன்னார் சிவமங்களத்தின் அன்புக் கணவரும், சிவசங்கர் (குஸ்திகான்), சிவவேணி (அமெரிக்கா), சிவமாலதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் தகனக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சுழிபுரம் மேற்கு. (இ) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அமைப்புக்கள் மீதான தடை குறித்து இந்தியா உணர்வுடன் செயற்படவேண்டும்

## பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்து



**ஈழத்தமிழர் உள்ளிட்ட ஒட்டுமொத்த தமிழினத்திற்கும் எதிராக கடந்த 10 ஆண்டுகளில் எத்தனையோ நடவடிக்கைகளை மேற்கொண்ட காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு இப்போது தமிழினத்திற்கு எதிராக மீண்டும் ஒரு துரோகத்தை செய்திருக் கிறது என பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இலங்கை அரசின் கோரிக்கையை ஏற்று உலகின் பல நாடுகளில் செயற்பட்டு வரும் 16 தமிழ் அமைப்புகளுக்கும், அவற்றுடன் தொடர்புடைய 424 செயற்பாட்டாளர்க ளுக்கும் இந்திய அரசு தடை விதித்திருப்ப தாக செய்திகள் வெளியானது. இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண் டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையில் நடந்த போரின் போது ஒன்றரை இலட்சம் அப்பாவி தமிழர்களை கொன்று குவித்த இலங்கை அரசு, இப்போது அந்த இனப்படுகொலைக்கு நீதி கேட்டு குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் தமிழ் அமைப்பு களையும் முடக்கிப் போடுவதில் தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

அந்த வகையில் தான் வெளிநாடுகளில் செயற்பட்டு வரும் 16 தமிழ் அமைப்புகளை யும், அத்துடன் தொடர்புடைய 424 செயற் பாட்டாளர்களையும் தடை செய்து கடந்த மாதம் உத்தரவிட்டது. அதுமட்டுமின்றி, இந்த அமைப்புகளுக்கு தடை விதிக்கும்படி உலக நாடுகள் பலவற்றுக்கும் இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்தது.

இலங்கை "எள்" என்றால் "எண்ணெ யாக" மாறி நிற்கும் இந்திய அரசு, மறு கேள்வியே எழுப்பாமல் இந்த 16 அமைப் புகளுக்கும், அதனுடன் தொடர்புடையவர்க ளுக்கும் தடை விதித்து ஆணையிட்டிருக்கி றது.

இந்திய அரசின் இந்த நடவடிக்கை ஜனநாயக விரோத செயலாகும். இது கடு மையாக கண்டிக்கத் தக்கது. வெளிநாடுக ளில் செயற்பட்டு வரும் தமிழ் அமைப்புகள் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருவதாக வும், இதனால் அந்த அமைப்புகளை தடை செய்ய வேண்டும் என்றும் இலங்கை பாது காப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அளி த்த பரிந்துரையின் பேரில் தான் இந்த நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

வெளிநாடுகளில் தமிழ் அமைப்புகள் தீவிரவாத செயல்களில் ஈடுபடுவதாக எந்த ஓர் ஆதாரத்தையும் இலங்கை அரசால் வெளி யிட முடியவில்லை.


உண்மையில் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள பிரிட்டிஷ் தமிழ் போரம், குளோபல் தமிழ் போரம், உலகத் தமிழ் இயக்கம் உள்ளிட்ட அமைப்புகளில் பல இலங்கை இனப்படுகொலைக்கு காரண மானவர்களை தண்டிக்க வேண்டும் என்ப தற்காக போராடி வருகின்றன.

ஜெனீவாவில் நடந்த ஐ.நா. மனிதவுரி மைப் பேரவைக் கூட்டத்திலும் இலங்கைக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று இவை குரல் கொடு த்தன. உண்மை இவ்வாறு இருக்கும் போது ஈழத் தமிழர்களுக்காக போராடுகின்றனவா, அல்லது தீவிரவாத செயல்களில் ஈடுபடு கின்றனவா? என்பதைக் கூட அறிந்து கொள் ளாமல் இந்த அமைப்புகளை இந்தியா தடை செய்திருப்பது மிகப்பெரிய அநீதியாகும்.

தமிழ் அமைப்புகளை தடை செய்ய வேண் டும் என்ற இலங்கையின் கோரிக்கையை அமெரிக்கா, பிரித்தானியா, கனடா உள்ளிட்ட நாடுகள் ஒட்டுமொத்தமாக நிராகரித்து விட்டன. அதுமட்டுமின்றி, இனப்ப டுகொலை குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள இலங்கைக்கு இத்தகைய கோரிக்கையை முன்வைக்க எந்த தகுதியும் இல்லை என்று அமெரிக்க அரசு கடும் கண்டனம் தெரி வித்திருக்கிறது.

இவ்வளவுக்கு பிறகும் இந்த அமைப்பு களை யும், அதனுடன் தொடர்புடையவர்க ளையும் இந்திய அரசு தடை செய்திருப்பதை பார்க்கும் போது இலங்கையின் எல்லா துரோகங்க ளுக்கும் இந்தியா துணை போவதாகத் தான் எண்ண வேண்டியிருக்கிறது.

எனவே, இலங்கையின் தாளத்திற்கெல் லாம் கண்ணை மூடிக்கொண்டு தலையாட் டுவதை விடுத்து உண்மையை உணர்ந்து இந்திய அரசு செயற்பட வேண்டும் .16 தமிழ் அமைப்புகள் மற்றும் 424 தனி நபர்கள் மீதான தடையை உடனே திரும்பப் பெற வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார். (2)




## வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணிப்பாளர் பதவி வெற்றிடம்

நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச் சின் வீதி அபிவிருத்தி அதிகார சபை யினால் பணிப்பாளர் (நிதி) பத விக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதகைமைகளாக ஆகக் குறைந்த தகுதிகள் மற்றும் சேவை களான இலங்கை யில்/ ஐக்கிய இராச்சியத்தில் பட்டயக் கணக் காளர் நிறுவகத்தின் அங்கத்துவத்தினைக் கொண்டிருத்தல் அல்லது ஐக்கிய இராச் சியத் தின் பட்டய சான்று பெற்ற கணக்காளர்கள் சங்கத்தின் அங்கத்துவத்தினைக் கொண்டிரு த்தல் அத்துடன் கணக்காளர்/ உள் ளக கணக் காய்வாளராக 15 வருட அனு பவத்துடன் அங் கத்துவத்திற்கு பின்னர் அவற்றில் 8 வருடங் கள் சேவையாற்றியிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி 45 வயதிற்கு மேற்படா தவராக இருத்தல் வேண் டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர் (நிர்வாகம்) வீதி அபிவிருத்தி அதிகார சபை, முதலாவது மாடி, செத்சி ரிபாய, பத்தரமுல்ல என்ற முகவரி க்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களை வலம்புரி காரியாலய த்தில் பார்வையிடலாம். (அ)

## இராசி பலன்

07.05.2014
(சித்திரை 24, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
அட்டமி முன்னிரவு 9.21 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 11.27 மணிவரை
இராகுகாலம் 11.55-01.25 மணிவரை
சுபநேரம் 4.25-5.55 மணிவரை
வளவன்

**மேடம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆடம்பரப் பொரு ட்களை வாங்குவதில் விருப்பம் காட்டுவீர்கள்.

**இடபம்:** விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், மூத்த சகோ தரர்கள் உங்களின் முன்னேற்றத் தில் அக்கறை காட்டுவார்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**மிதுனம்:** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித் துக் கொள்வீர்கள், வெளியூர் பயணங்களால் நன்மையு ண்டு, நாவன்மையால் நற்பெ யர் எடுப்பீர்கள்.

**கடகம்:** நண்பர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பிள்ளைகளால் சிறு விரயங்கள் ஏற்படலாம், சிந்தனையாற்றலால் சிறப் படைவீர்கள்.

**சிம்மம்:** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப் புணர்ச்சி அவசியம், மாற்றங்க ளால் ஏற்றம் பெறுவீகள்.

**கன்னி:** தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் அதிகரிக்கும், ஒளி மயமான எதிர்காலத்திற்கு உறு துணை புரியும் நாள்.

**துலாம்:** குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன் றும், தொழிலில் ஆர்வத்துடன் பணி புரிவீர்கள், ஆரோக்கிய மான நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** விருந்தினர் வருகையுண்டு, வருங்கால நலன்கருதி புதிய சிந்தனைகள் உருவாகும், தந்தை வழி உறவில் எதிர்பா ர்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**தனுசு:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது நல்லது, தொழிலில் விழிப்புணர்ச்சி அவசியம், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம், பிரயாண பயமுண்டு.

**மகரம்:** கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பிரிந்து சென்றவர் கள் பிரியமுடன் வந்திணைவர், குடும்பத்தில் விட்டுக்கொடுப்பது நல்லது, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம் பெறலாம், கடன் சுமை குறைய புதிய வழியை கையா ள்வீர்கள், ஆரோக்கியமான நாள், கௌரவமான நாள்.

**மீனம்:** பிள்ளைகளின் சுப நலன்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியமொன்று இன்று கைகூடும், கட்டடப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றப்படும் பதின்ம வயதினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(கரணவாய்)

காதல் வலையில் சிக்கி பெற்றோர்களை பிரிந்து சென்ற பதின்ம வயதினர் பலர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இம்மாதத்தில் மூன்று முறைப்பாடுகள் பெற்றோரினாலும் ஏமாற்றப்பட்ட பதின்ம வயது சிறுமிகளாலும் பதியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




இவ்வாறான பிரச்சினைகளில் 17 வயதுக் குட்பட்ட குறிப்பாக தனியார் வகுப்புக்களுக்கு செல்லும் பதின்ம வயதினர் இளைஞர்களுடன் பழகி காதல் வலையில் சிக்குகின்றனர்.

இவ்வாறான தவறான செயல்கள் நடைபெற பெற்றோர்களின் கவனக்குறைவும் பிள்ளைகளிடம் காணப்படும் கையடக்கத் தொலைபேசியுமே காரணம் என பொலிஸ் தரப்பினரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான தவறான செயற்பாடுகளுக்கு பிள்ளைகள் இடம்கொடாது செயற்படுமாறு அனைத்துப் பெற்றோர்களுக்கும் நெல்லியடிப் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-60)




# யாழ்.ஆயர் தோமஸ் உரோம் பயணம்

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை உரோமையில் நிகழும் ஆயர் பேரவை மற்றும் திருத்தந்தை சந்திப்பில் (அட்சாமினா) கலந்து கொள்வதற்காக யாழ்.ஆயர் உரோம் பயணமானார்.

இலங்கை .ஆயர் பேரவையுடன் இணைந்து சென்றுள்ள ஆயர் உரோமில் தங்கியிருக்கும் இருவார காலத்தில் திருத்தந்தை பிரான் ஸிஸை இலங்கை ஆயர்களுடன் இணைந்தும் தனிப்பட்ட முறையிலும் சந்தித்து பேசவுள்ளார்.

அத்துடன் இலங்கை ஆயர் பேரவையானது திரு அவையின் பல்வேறு நிலையினையும் சந்தித்து இலங்கை திருச்சபையின் நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடவுள்ளார்.

மேலும் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உரோம புரி புறப்பட முன்னதாக இலங்கைக்கான திருத்தந்தையின் புதிய தூதுவர் பேராயர் பியறி லுங்கியன் வான் றொட்டையும் சந்தித்து உரையாடியமை குறிப்பிடத்தக்கதாகும். (2)

# செயற்கை முறையில் சினைப்படுத்துவதற்கு 15 மில். ரூபா பெறுமதியான உபகரணங்கள்

## கையளித்தது சேவாலங்கா

(யாழ்ப்பாணம்)

பசுக்களைச் செயற்கை முறையில் சினைப்படுத்துவதற்குத் தேவையான உயிரணுக்கள், ஓமோன்கள் மற்றும் உபகரணத் தொகுதிகளை சேவாலங்கா நிறுவனம் வடமாகாண விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் கையளித்துள்ளது.

மல்லாவியில் அமைந்துள்ள சேவாலங்கா நிறுவனத்தின் அலுவலகத்தில் சேவாலங்காவின் துணைத்தலைவர் பேராசிரியர் அ. நவரட்ணராஜா தலைமையில் இவற்றைக் கையளிக்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

உள்ளூர்ப் பசுக்களை நல்லினக் காளைகளைப் பயன்படுத்தி இயற்கை முறையில் சினைப்படுத்துவதன் மூலம் அதிக பாலுற்பத்தியைத் தரக்கூடிய கலப்பு இனப் பசுக்களை உருவாக்க முடியும்.

எனினும் இயற்கை இனக்கலப்பில் உருவாகும் கன்று பசுவாக இருப்பதற்கான நிகழ்தகவு ஐம்பதுக்கு ஐம்பது ஆகும்.

அத்தோடு இயற்கை இனக் கலப்பை மேற்கொள்வதற்கு நல்லினக் காளைகளுக்கு இங்கு பற்றாக்குறைவும் நிலவுகிறது.

இதனால் 95 விழுக்காடு பசுக் கன்றுகள் பிறப்பதற்கான நிகழ்தகவைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட விந்தணுக்களைக் கொண்ட சுக்கிலத்தை சேவாலங்கா நிறுவனம் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து உறை நிலையில் வரவழைத்து அமைச்சரிடம் வழங்கியுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட விந்தணுக்களைக் கொண்ட இந்த உறை நிலைச் சுக்கிலம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கால்நடை அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுத்துப் பயன்படுத்தப்படவுள்ளது.

உறைநிலைச் சுக்கிலம், இனப்பெருக்க ஓமோன்கள் மற்றும் செயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கான உபகரணங்கள் ஆகியவற்றின் மொத்த மதிப்பீடு ஏறத்தாழ 15 மில்லியன் ரூபாய்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்து ள்ளார்.

அத்துடன் வளர்ப்பு நாய்களுக்கான உரிமக்கட்டணமாக இருபது ரூபாவும் வரியும் செலுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை செட்டியார் தோட்டத்திலும் அதனைத் தொடர்ந்து 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை விவசாயக் கந்தோர் ஒழுங்கையிலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை ஜமுனா வீதி யிலமைந்துள்ள சுகாதாரக் கல்வி மையத்திலும் அதனைத் தொடர்ந்து 11.30 மணி முதல் 1.30 மணி வரை பருத்தித்துறை வீதியிலமைந்துள்ள சங்கிலியன் மன்றத்திலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (2)

# மத்தியஸ்த சபை பிரதி சனிக்கிழமைகளில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மத்தியஸ்தர் சபை நடவடிக்கைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும் என யாழ்.மாநகர சபை தவிசாளர் வீ.ஸ்ரீசக்திவேல் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் இம் மத்தியஸ்த சபை நடவடிக்கைகள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் கிறிஸ்தவ மக்களின் நன்மை கருதி இம்மாற்றத்தினை செய்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு எதிராக வழக்கு

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற ஒருவரை நெல்லியடி பொலிஸார் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் இரவு 7 மணியளவில் கரவெட்டி வீதியூடாக உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றி கொண்டு பயணித்துள்ளார்.

இதேவேளை அவ்வீதியூடாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட நெல்லிய டிப் பொலிஸார் குறித்த உழவு இயந்திரத்தினை இடைமறித்துள்ளனர்.

ஆனால் குறித்த நபர் நிறுத்தாது சென்றமையையடுத்து அவ் உழவு இயந்திரத்தை பொலிஸார் பின்தொடர்ந்தனர்.

இதனையடுத்து குறித்த நபர் உழவு இயந்திரத்தை அவ்விடத்தில் விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த உழவு இயந்திரத்தினை மணலுடன் கைப்பற்றி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதன்பின்னர் குறித்த நபர் தானாகவே பொலிஸில் ஆஜராகி குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த நபர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றி சென்ற குற்றத்துக்காக பருத்தித் துறை நீதிமன்றத்தில் அந்நபருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளை மறுதினம் மேற்படி நபருக்கான வழக்கு இடம் பெறவுள்ளது. (2-60)

# செஞ்சிலுவைச்சங்கத்தினமும் அபிவிருத்திக் கூட்டமும்

உலக செஞ்சிலுவை சங்க தினம் நாடு பூராகவும் நாளை வியாழக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இதற்கமைய இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையில்இந்நிகழ்வு அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு கிளையின் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் பிரிவுத் தலைவர், செயலாளர் மற்றும் மாவட்ட செயலக கிளையின் ஆளுநர் சபையின் உறுப்பினர்களுக்கான அபிவிருத்திக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல-67, கோவில் வீதி , யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்ட கிளையில் கிளையின் தலைவர்குபாலகிருஷ்ண ன்தலைமையில் நடைபெறும்.

எனவே இக்கூட்டத்திற்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்ட உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (2-134)



தென்னமெரிக்காவின் பிரிட்டிஷ் கயனாவிற்கு உயர் ஸ்தானிகராக இடமாற்றம் பெற்றுச்செல்லும் யாழ்.இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்தின் பிரியா விடை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ரில்ஹோா விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது. இதன்போது யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள்துணை வேந்தரும், வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதையும் துணைத்தூதுவருக்கான நினைவுப் பரிசினை ரில்ஹோா விடுதியின் உரிமையாளர் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:—எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா

## கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்காவில் உள்ள ஷந்திர தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப் ளோமா 4 வருட பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையால் கோரப்பட்டுள் ளன. இப்பயிற்சி நெறிக்கு க.பொ.த (உயர்தர) பரீட்சையில் கணித பாட ங்களில் சித்தியடைந்த 18 வயதுக்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை இல 1862 (09.05.2014) வர்த்தமா னி யில் பார்வையிட லாம். அத்துடன் www.iet.edu.lk என்ற இணையத் தளத்திலும் பார்வையிடலாம்.

இதற்கான விபரத்தையும் விண் ணப்பத்தையும் சோமசுந்தரம் வீதி சுண்டுக்குளியில் உள்ள தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை மாவட்ட அலுவலகத் தில் பெற்றுக்கொள்ளலாம் என மாவ ட்ட அலுவலர் சி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்க ப்படுகிறது. (அ)

# வானொலி, தொலைக்காட்சி சார்ந்த சாதனங்கள் பழுதுபார்த்தல்

## நேர்முக தேர்வு நடைபெறுகின்றது

இலங்கை தொழிற்பயிற்சி அதி கார சபை யானது யாழ்ப்பாண மாவ ட்டத்தில் வானொலி, தொலைக்காட்சி, அவை சார்ந்த சாதனங்கள் பழு துபார்த்தல் கற்கைநெறியை ஆரம்பிக்கவுள்ளது.

இக்கற்கைநெறி தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக் கான பயிற்சியாகும்.

இக்கற்கை நெறிகள் கற்க விரும் புவர்களுக் கான நேர்முகத் தேர்வு நடைபெற்றுக் கொண் டிருப்பதால் தங்கள் கல்வி தகைமை சான்றி தழ்களுடன் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன் னர் யாழ். கே.கே. எஸ்.வீதியில் அமைந்துள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம் எனும் முகவ ரிக்கு வருமாறு உதவிப் பணிப்பா ளர் கே.நிரஞ் சன் கேட்டுள்ளார்.

மேலதிக விபரங்களை 021 222 7949 என்ற தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பு கொண்டு பெற் றுக் கொள்ளலாம். (அ)

# தேசிய வலு ஆய்வரங்கிற்கு ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெறவுள்ள தேசிய வலு ஆய்வரங்கிற்கான ஆராய்ச்சிக் கட்டுரைகள், விடய ஆய்வுகள் அல்லது இற்றைவரை யாக்கப்பட்ட புத்தாக்கசெயற்றிட்டங்களைசமர்ப்பிக் குமாறு விதுல்கா வலு ஆய்வரங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ் ஆய்வரங்கமானது சுற்றாடல் மற்றும் மீள் புதுப்பிக்கத்தகுவலு அமைச்சின் கீழுள்ள இலங்கை வலு அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருடாந்த நிகழ்வான விதுல்கா எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் ஆய்வரங்கத்தில் வரை யறைக்கு உட்படுத்தப்படாதவாறு கீழ்வரும் விடயப்பரப்புக்கள் உள்ளடக் கப்படுகின்றன.

வலு வினைத்திறமை, பாதுகாத் தல் மற்றும் முகாமைத்துவம், தேசிய வலுப் பாதுகாப்பு, மீள் புதுப்பிக்கத் தக்க வலு வளங்கள் மற்றும் தொழில் நுட்பவியல்கள், பாவிக்கக்கூடிய எரி பொருட்கள், கைத்தொழில் வலு, சுற்றாடலுக்கேற்றவாறு அமைக்கப் பட்ட கட்டடங்கள் மற்றும் ஆபத்தில் லாத சூரிய தொழில்நுட்பவியல்கள், வலு வினைத்திறன் மற்றும் சுற் றாடல்சார் நிலை பெறுதகு போக்குவர த்து முறைமைகள், விவசாயத்திற் கான வலுச்சேவைகள், வலு மற்றும் நீர், வலு சேமிப்பு, வலு கடத்தல், வலு முகாமைத்துவம் (Demand Side Ma nagement), வலு பொருளாதாரம், வலு கொள்கை, வலு சுற்றாடல் மற்றும் சமூகம்.

எனவே ஆர்வமுள்ள பங்கு பற்று பவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட விட யப்பரப்புக்கள் தொடர்பாக 300 சொற் களுக்கு மேற்படாத அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டும்.

எதிர்வரும் 30ஆம் திகதி அறிக் கைகள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியாகும். எதிர்வரும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டத ற்கான அறிவித்தல் வெளிவரும். எதிர்வரும் ஜூலை 31ஆம் திகதி முழு மையான அறிக்கை சமர்ப்பிப்பதற் கான இறுதித்திகதியாகும்.

அறிக்கைகள் அல்லது ஆய்வு களை symposium@energy.gov.lk என்ற மின்னஞ்சல் வழியாக அல் லது ஏற்பாட்டுக்குழு விதுல்கா வலு ஆய்வரங்கம், இலங்கை நிலை பெறு தகு வலு அதிகார சபை, 3G-17, BMICH, கொழும்பு 07 என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பவும்.

மேலதிக விபரங்களுக்கு Ms. ரவின கருணாரத்ன அல்லது Ms. பூர்ணிமா கல்ஹாரி ஆகியோருடன் 011 323 1022 என்ற தொலை பேசி எண்ணுடன் தொடர்பு கொள்ள லாம். (அ)

# சுகாதாரத்துறை பிரச்சினைக்கு அரசாங்கமே காரணம்- ஜே.வி.பி.

அரசாங்கத்தின் சில பிழையான தீர்மா னங்களே சுகாதாரத்து றையில் பிரச்சினை கள் ஏற்படக் காரணம் என ஜே.வி.பி கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி. கட்சி வெளி யிட்டுள்ள அறிக்கையில்,

சுகாதாரத்துறையின் சில முரண்பாடுகள் பாரியளவிலான பிரச்சி னையாக மாறுவதற்கு அரசாங்கமே பொறுப்பு சொல்ல வேண்டும். சுகாதாரத்துறையில் நிலவி வரும் பிரச்சி னைகளுக்கு அரசாங்கம் உடனடித் தீர்வு வழங்க வேண்டும். ஏனெனில் இப் பிரச்சி னையால் நோயாளிகள் பாரிய நெருக்கடி களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அரசாங்கத்தின் கொள்கைகள் காரண மாக ஒவ்வொரு துறையிலும் இவ்வாறான பிரச்சினைகள் நிலவி வருகின்றன.

இதேவேளை ஜே.வி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அக்கட்சியின் அவுஸ்திரேலிய பிரிவினால் ஒழுங்கு செய் யப்பட்டுள்ள நிகழ்வுகளில் பங்கேற்கும் நோக்கில் அவர் அவுஸ்திரே லியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

இரண்டு வாரங்கள் அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் அவர் கட்சியின் கொள்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் கூட்டங்களில் பங்கேற்கவுள்ளதுடன் கட்சியின் அவுஸ்திரேலிய கிளை ஒழுங்க மைப்பு பணிகளையும் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படு

இன்றே உங்கள் வாகனத்தின் புகை பரிசோதனையை ட்ரய்வ் க்ரீன் மூலம் மேற்கொண்டு

தேவையற்ற முறையில் எரிபொருளுக்காக செலவழிக்கின்ற பெருமளவு பணத்தினை மீதப்படுத்திக் கொள்ளுங்கள்

இன்றே உங்கள் வாகனத்தின் புகை பரிசோதனையை ட்ரய்வ் க்ரீன் மூலம் செய்து எரிபொருள் செயல்திறன் பற்றி அறிந்து கொள்ளுங்கள். பணத்தினை சேமிக்க ஆரம்பியுங்கள்.

வாகனத்தின் எரிபொருள் செயல்திறன் பற்றிய தரவுகளை ட்ரய்வ் க்ரீன் புகை பரிசோதனையொன்றின் மூலமே உங்களால் பெற்றுக்கொள்ள முடியும்.

நீங்களும் இன்றே ட்ரய்வ் க்ரீன் இற்கு சென்று உங்கள் வாகனத்தின் புகை பரிசோதனையை மேற்கொண்டு அதன் மூலம் பெறுகின்ற தரவுகளை பயன்படுத்தி உங்கள் வாகனத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளை முறைப்படி செய்து எரிபொருள் செயல்திறனை அதிகரித்துக் கொள்ளுங்கள். பண விரயத்தினை குறைத்துக் கொள்ளுங்கள்.

(சி-7295)

இத்தரவுகள் ட்ரய்வ் க்ரீன் இடமிருந்து இலவசம்

எரிபொருள் விரயம் பற்றிய தரவுகள்

பராமரிப்புக்கான எளிய வழிகாட்டல்கள்



drivegreen
so we can all breathe easier

நாடு முழுவதும் உள்ள ட்ரய்வ் க்ரீன் கிளைகளுக்கு சமூகமளியுங்கள். அல்லது உங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள ட்ரய்வ் க்ரீன் நிலையத்தின் தகவல்களை பெற தொடர்புகொள்ளுங்கள்.

உடனடி அழைப்புக்கு: 0117 444 444

நிபந்தனைகளுக்கு உட்பட்டது. பெற்றோல் வாகனங்களுக்காக மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 கோரிக்கைகளை முன் வைத்து மின்சார சபை ஊழியர்கள் போராட்டம்

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை இணைந்த தொழிற்சங்க முன்னணி 11 கோரிக்கைகளை முன்வைத்து இன்று புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொழும்பிலுள்ள இலங்கை மின்சார சபை தலைமையகத்திற்கு முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் இதில் இலங்கை முழுவதிலிருந்தும் ஊழியர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இதற்கு செவிசாய்க்காவிட்டால் நாடு முழுவதும் தொடர் வேலை நிறுத்தப் போராட்டங்கள் வெடிக்குமென்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2012ஆம் ஆண்டு நூற்றுக்கு 45 வீதம் சம்பள உயர்வு கோரினோம். ஆனால், அரசாங்கம் 25 வீத உயரவை வழங்கியது.

எஞ்சிய அதிகரிப்பை ஒரு வருடத்திற்குள் வழங்குவதாக உறுதி வழங்கியும் இதுவரையில் எதுவும் வழங்கப்படவில்லை.

அதேபோன்று சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கும் எதுவிதமானநடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

2015ஆம் ஆண்டிற்கு முன்பதாக எமது சம்பள முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும்.

தற்போது தனியார் நிறுவனமொன்றூடாக 4ஆயிரம் பேரின் சேவை மின்சார சபைக்கு பெற்றுக் கொள்ளப்படுகிறது.

பல வருடங்களாக சேவை செய்யும் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்.

மின்சார சபை இன்று அரசியல்வாதிகளின் கூடாரமாகி விட்டது. அனைத்திலும் அரசியல் தலையீடுகளே தலைதூக்கியுள்ளன.

பதவியுயர்வுகளிலும் இதே நிலையேதான். இடமாற்றங்களிலும் அரசியல தலையீடுகள் தலைதூக்கியுள்ளன.

மின் உற்பத்தி நிலையங்களை அதிக உற்பத்தி திறனுக்கான நிறுவனங்களுக்கு ஒப்படைக்கின்றோம் என்ற பெயரில் வெளிநாட்டு கம்பனிகளுக்கு விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு இலங்கையின் தேசிய மக்கள சொத்தான மின்சார சபையை தனியார் கம்பனிகளுக்கு விற்றுத் தீர்க்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மின்சார சபையில் தொழில் புரிந்து ஓய்வு பெற்ற ஊழியர்களின் பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதில் முன்னுரிமை வழங்காதுள்ளனர். (2)

## வலம்புரி செய்தியால் ஒளி பெற்றன வீதிகள்

வலி.வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பல பகுதிகளில் உள்ள வீதி வலம்புரிசெய்தியை அடுத்து வீதி விளக்குகள் பொருத்துப்பட்டு வருகின்றன.

இதற்கமைய வித்தகபுரம், பன்னாலை, அளவெட்டி ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகளுக்கே வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இவ் வீதியில் மின்குமிழ்கள் ஒளிர்வதில்லை என வலம்புரி பத்திரிகையில் பொது மக்களால் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இச் செய்தியையடுத்தே உரிய அதிகாரிகள் இதனை கவனத்தில்கொண்டு இதனை சீர் செய்து வருவது எமக்கு நன்மையளிப்பதாக பொது மக்கள் பலரும் தெரிவித்துள்ளனர். (2-28)



மானிப்பாய் மருதடி அறநெறிப் பாடசாலையின் ஆண்டுவிழாவும் பரிசளிப்பு வைபவமும் அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், ஆலய அறங்காவலர் உதயசூரியர் மற்றும் அறநெறிப் பாடசாலை அதிபர் தம்பாபிள்ளை ஆசிரியர் ஆகியோர் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆசிரியர் சத்தியவேந்தன் தம்பதியினர் பாடசாலை ஆசிரியரைக் கௌரவிப்பதையும், விருந்தினர் வெற்றிபெற்ற மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் மாணவி ஒருவரின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## குற்றச்சாட்டுக்களை நிரூபித்தால் பதவி விலகத் தயார்- அஜித் ரோஹன

(கொழும்பு)

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகத் தயார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

பிரபல சிங்கள தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார. அவர் தொடர்ந்து கூறுகையில்

பதவிக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்படும் சம்பளம், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் தவிர்ந்த எதனையும் பெற்றுக்கொண்டதில்லை.

அவ்வாறு சட்டத்திற்கு முரணான வகையில் பெற்றுக் கொண்டிருந்தால் அதனை நிரூபிக்க முடியும். இலஞ்சம் பெற்றுக் கொண்ட தாகவோ அல்லது வேறும் சலுகைகளைப் பெற்றுக்கொண்டதாகவோ நிரூபிக்கப்படடால் உடன் பதவி விலகத் தயார்.

மோட்டார் போக்குவரத்து குற்றச் செயல்களின் போது இலகுவாக பணம் செலுத்தக் கூடிய முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் தண்டப் பணத்தை செல்லிடப் பேசி மூலம செலுத்த நடவடிக்கை எடுக்கபபடும் என அவர் குறிப்பிட்டுள்ளார. (2)

## வலம்புரி செய்திக்கு ஈ.பி.டி.பி.மறுப்பு

தங்கள் பத்திரிகையில் (06.05. 2014) **ஆயுதம் தொடர்பில் கைதான பெண்ணிற்கு விளக்கமறியல்** என்னும் தலைப்பில் பிரசுரமான செய்தியில் எமது கட்சியின் பெயரை குறிப்பிட்டமை தொடர்பாக நாம் எமது மன வருத்தத்தினை தெரிவித்துக் கொள் கின்றோம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே. வி. குகே ந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள மறுப்பு செய்தியில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது,

கந்தசாமி கமலேந்திரன் என்பவரது சகோதரரான மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய வர்ணன் என்பவருக்கும் எமது கட்சிக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது. கமலேந்திரன் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதும் அவர் தான் எமது கட்சிலிருந்து விலகியதாக அறிவித்ததும் ஊடகங்களில் வெளிவந்திருந்ததும் தாங்கள் அறிந்த விடயமே.

இன்று (நேற்று) பிரசுரிக்கப்பட்ட இச் செய்தியானது எமது கட்சியின் நற்பெயருக்கு பங்கம் ஏற்படும் வகையில் அமைந்துள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட செய்திக்கும் எமது கட்சிக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரியப்படுத்துகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 | 80 |
| தக்காளி | 80 | 120 | 30 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 40 |
| கோவா | 40 | 30 | 40 | 40 |
| கரட் | 100 | 80 | 50 | 100 |
| பூசணி | 30 | 30 | 35 | 40 |
| புடோல் | 60 | 50 | 40 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 80-90 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 90 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 40 | 50 |
| பயற்றங்காய் | 60 | 120 | 50 | 60 |
| லீக்ஸ் | 60 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 60 | 60 | 40 | 80 |
| முருங்கைக்காய் | 140 | 120 | 70 | 120 |
| போஞ்சி | — | 160 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 50 | 30 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 130 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 40 | 30-40 | 30-35 |
| இராசவள்ளி | 80 | 120 | 100 | 80 |

## (f) பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 06

facebook

**கோகிலா பாலகுமார்**



100 கிலோ அரிசி மூட்டை தூக்குபவனுக்கு அதை வாங்க சக்தி இல்லை.
100 கிலோ அரிசி மூட்டை வாங்குபவனுக்கு அதை தூக்க சக்தி இல்லை.

**தனுசன் குமார்**

என் முயற்சிகள்
பலமுறை என்னை
கைவிட்டதுண்டு... ஆனால்
முயற்சியை ஒரு போதும்
நான் கைவிட்டதில்லை...
நியூட்டன்

**அர்ச்சனா செல்வகுமார்**



பையன்: நம்ம லவ் மேட்டர மெதுவா வீட்டுல சொல்லிட்டேன்...
பொண்ணு: சூப்பர் டா, அதுக்கு என்ன சொன்னாங்க?
பையன்: மெதுவா சொன்னதால யார் காதுலயும் விழல...

Like.Comment... Like

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri எனும் தளத்தில் பதிவுசெய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தின் தாளத்திற்கு ஆடுவது தேசத்துரோகம்

நாட்டுக்கு எதிராகச் செயற்படுவோரின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் செயற்படுவதும் சர்வதேசத்தின் தாளத்திற்கு ஆடுவதும் தேசத்துரோகமாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக குடும்ப சுகாதார உத்தியோகத்தர் தினத்தையொட்டி நேற்று முன்தினம் பெந்தர 'ஈகல் லேக் சைட்' ஹோட்டலில் நடைபெற்ற தேசிய வைபவத்தில்கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றுகையில்,

வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபடுவோர் தொடர்பில் தெரிவித்த அவர், வரப்பிரசாதங்களை வழங்கும் அரசாங்கத்தை வீழ்த்திவிட்டு வேறு வகையில் வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ள முனைவது உசிதமானதல்ல எனவும் எவ்வாறெனினும் மக்களைப் பணயம் வைத்து மேற்கொள்ளும் போராட்டங்களை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

சர்வதேச ரீதியில் நாட்டுக்குக் கிடைத்த கௌரவங்களில் இந்த உத்தியோகத்தர்களின் சேவையும் ஒன்று. ஆசியாவைப் பொறுத்த வரை இலங்கை சிசு மரண எண்ணிக்கையில் மிகக் குறைந்த நாடாகவும் மகப்பேற்று மரணம் குறைந்த நாடாகவும் உள்ளமையே அந்த கௌரவமாகும்.

நான் பல நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த போது அந்நாடுகளில் எமது இந்த சேவை தொடர்பில் ஆய்வுசெய்ய அவர்கள் விருப்பம் தெரிவிக்கின்றனர்.

குடும்ப சுகாதார சேவை என்பது எதற்கும் நிகரான சேவையல்ல. அது ஒரு உன்னதமான சேவை. தாயை மட்டுமன்றி தாயின வயிற்றில் உள்ள குழந்தையின் நலனையும் கவனிக்கும் அரிய சேவை. கருணைச் சேவையுமாகும்.

சுகாதாரத் துறையைப் பொறுத்த வரை அரசாங்கம் சகல தேவைகளையும் நிறைவேற்றி வருகிறது. வருடா வருடம் அத்துறைக்கான நிதியையும் அரசாங்கம் அதிகரித்து வருகிறது. நாம் இத்துறையை ஒருபோதும் குறைத்து மதிப்பிடுவதில்லை.

வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் பிரச்சினையை நோக்கும் போது இது தொழிற்சங்கத்துக்கும் தொழிற்சங்கததுக்குமிடையிலான பிரச்சினை. இதில் தலையிட்டு சுமுகமாக இதற்குத் தீர்வு காண்பதற்கு சுகாதார அமைச்சர் தயாராகவே உள்ளார். இதனை அந்த சங்கங்கள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் பேச்சு வார்த்தை மூலமே இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதனை விடுத்து வேலை நிறுத்தப் போராட்டம் என்ற பெயரில் மனித உயிர்களைப் பணயம் வைத்துச் செயற்படுவதை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

போராட்டம் வேலை நிறுத்தம் என்றில்லாது அனைத்துப் பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கும் பொறுப்பான அரசாங்கம் இது. இவ்வாறு செயற்படு வோர் அதனைக் கவனத்திற் கொண்டு செயற்படுவது முக்கியமாகும்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை சீர்குலைக்கவும். அரசாங்கத்தை வீழ்த்தவும் சர்வதேச நாடுகளில் இருந்து சில சக்திகள் செயற்படுகின்றன. இது தொடர்பில் அனைவரும் கவனத்துடன் செயற்படுவது முக்கியம்.

அரச வளங்களை விற்று நாட்டை வீழ்ச்சியுறச் செய்த அரசாங்கங்கள் போலன்றி விற்றதை மீட்டு பாதுகாத்த அரசாங்கம் இது. அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது அவசியமாகும்.

வரப்பிரசாதங்கள் வழங்கும் அரசை வீழ்த்திவிட்டு வேறு வழியில் வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ள நினைப்பது நல்லதல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# ஜனாதிபதி தேர்தல் குறித்து இரகசிய பேச்சுவார்த்தை

## ஐ.தே.க. தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்து அறிவிப்பதற்கான தருணம் இன்னும் வந்துவிடவில்லை என பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கபிர் காசிம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை அரசாங்கம் விரைவில் நடத்தக்கூடும் எனவும், அதில் மகிந்த ராஜபக்ஷ வுக்கு எதிராக பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்து எதிர்க்கட்சிகளிடையே ஆலோசனை நடத்தப் பட்டுவருவதாக வெளியாகியிருக்கும் செய்திகள் தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே இதனை அவர் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் அறிவித்த பின்னரே இது தொடர்பில் சிந்திக்க முடியும். இது தொடர்பில் ஏனைய அரசியல் கட்சிகளுடனும் அமைப்புக்களுடனும் ஐ.தே.க. ஆலோசனைகளை நடத்தி வருவதாகத் தெரிவித்த அவர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை மாற்றியமைப்பது குறித்தே இந்தப் பேச்சுக்கள் இடம் பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இருந்தபோதிலும் இந்தப் பேச்சுக்களின் விபரங்களைத் தெரியப்படுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்த அவர, இந்தப் பேச்சுக்கள் மிகவும் இரகசியமாகவே நடத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். கோட்டே நாக விகாரை வண மாதுறுவேவ சோபித தேரருடன் ஐ.தே.க. பேச்சுக்களை நடத்தியிருப்பதையும் உறுதிப்படுத்திய அவர், அது குறித்த மேலதிக தகவல்களை வெளிப்படுத்தவில்லை.

ஐ.தே.க.வின் அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி. சஜித் பிரேமதாசவை எதிர்க்கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்தலாம் என ஐ.தே.க. எம்.பி. சிறிலால் லக்திக கடந்த வாரத்தில் தெரிவித்திருந்தார். இது குறித்து கபிர் காசிம் தெரிவிக்கையில்,

இது தொடர்பில் கட்சியின் செயற்குழுவே முடிவெடுக்க வேண்டும் என்றார். (2)



தேசத்துக்கு மகுடம் 2014 அபிவிருத்திக் கண்காட்சியில் காட்சிக் கூடங்களை அமைத்த சிறந்த நிறுவனங்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. இதில் இராணுவத்தினரின் காட்சிக்கூடம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டது. அவ்வாறே சிறந்த காட்சிக் கூடத்துக்கான முதலாவது பரிசை தெங்கு அபிவிருத்தி அமைச்சுக்கும் இரண்டாவது பரிசு கடற்படையினரின் காட்சி கூடத்திற்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலா பயணிகளுக்காக கசினோ அவசியமானது

## அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவிப்பு



இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக கசினோ சூதாட்ட நிலையங்களை ஆரம்பிக்க வேண்டுமாயின், கடலில் நிறுத்தப்பட்ட கப்பல் ஒன்றில் அதனை ஆரம்பிப்பது மிகவும் சிறந்தது என அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின், நாட்டுக்குள் வரும அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

நாட்டிற்குள் கசினோ சூதாட்ட நிலையங்கள் ஆரம்பிக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி கூறியுள்ளார்.

அப்படி ஆரம்பிக்க வேண்டும் என்றால், கப்பல் ஒன்றில் அதனை ஆரம்பித்து சுற்றுலா பயணிகளுக்கு மாத்திரம் கசினோ விளையாட அனுமதி வழங்குவது பொருத்தமானதாக இருக்கும்.

உலகில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றால், சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

இலங்கைக்கு வருடாந்தம் சுமார 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.


உலகில் உள்ள பல நாடுகளை சேர்ந்தவர் கள் இலங்கைக்கு வருகை தர விரும்புகின்றனர்.

உலக நாடுகளுக்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ளும் பலருக்கு கடல்களை காண கிடைப்பதில்லை. அவர்கள் குளிரான காலநிலையை விரும்புவதில்லை.

இதனால், பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகின்றனர் எனவும் அமைச்சர மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

# அம்பாந்தோட்டை பிரச்சினையை சர்வதேசத்திற்கு எடுத்துரைப்போம்

## கரு ஜயசூரிய எச்சரிக்கை



(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் ஐக்கிய தேசியக் கட்சி மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்காவிடின் சர்வதேச அளவில் பிரச்சினையினை கொண்டு செல்வதை தவிர்க்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை சம்பவம் தொடர்பில் கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்துக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் நீதித்துறை மீதான நம்பிக்கையை மக்கள் இழந்து விட்டனர். இந்த அரசாங்கத்தினால் நீதித் துறையினை கட்டியெழுப்ப முடியாது.

அம்பாந்தோட்டையில் அரசாங்கத் தரப்பு குண்டர்களினால் தாக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் எந்த சட்ட நடவடிக்கைகளும் எடுக்காதுள்ளது.

அன்றைய தினம் சம்பவத்தின் போது தாக்குதலை மேற்கொண்ட அடியாட்கள் யார்? அவர்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்கள் எவை என்பன தொடர்பில் அனைத்து ஆதாரங்களும் உள்ளன.

அனைத்து ஊடகங்களும் இதை வெளியிட்டன. இவ்வாறு இருக்கும் நிலையில் அரசாங்கம் குற்றவாளிகள் மீது எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காதிருப்பதற்கான காரணம் என்ன?

குறித்த காலத்திற்குள் இது தொடர்பில் அரசாங்கம் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இல்லையேல் இவ் விடயம் தொடர்பில் நாம் சர்வதேச அளவில் கொண்டு செல்வதையும் எவராலும் தடுக்க முடியாது.

இலங்கையில் சட்ட, நீதிச்சேவைகள் இருப்பதன் கார ணத்தினாலேயே நாம் இன்னமும் அரசாங்கத்தை வலியுறுத்தி நிற்கின்றோம். இச்சம்பவம் தொடர்பில் நியாயமான தீர்வுகளையே நாம் எதிர் பார்க்கின்றோம் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

798

# சுதந்திரம்

இரண்டாம் வகுப்பில் படித்து வந்த ரகு மிகவும் புத்திசாலி! புத்திசாலித்தனத்துடன், நல்ல மனமும், நற்பண்புகளும் படைத்தவன்!

சிறு வயது முதலே அவனுக்கு இயற்கை மீது பற்றுதல் அதிகம்.

வானில் தவழும் மேகங்களையும், பூத்துக் குலுங்கும் மலர்ச் செடிகளையும், பறவைகளின் இனிய கீதத்தையும் மிகவும் ரசிப்பவன்!

மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றின் மீது அலாதிப் பிரியம் அவனுக்கு உண்டு!

ஒருநாள் அவன் தன் தாயிடம், "அம்மா! நமக்கு பேசும் சக்தியைக் கொடுத்த கடவுள், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் அந்த சக்தியை ஏன் தரவில்லை?" என்று கேட்டான்.

"அப்படியில்லை ரகு! கடவுள் அவற்றுக்கும் குரல் கொடுத்திருக்கிறார்.

அவற்றின் மொழி நமக்குப் புரிவதில்லை. அவ்வளவுதான்!" என்றாள்.



ஒருநாள் ரகு பள்ளியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கையில் சாலையோரத்தில் ஒரு கிளி காயமடைந்து கீழே விழுந்திருப்பதைக் கண்டான்.

அருகில் சென்று பார்த்தவுடன், அதன் காலில் அடிபட்டு விழுந்திருந்ததை அறிந்தான்.

அதன் நிலையைக் கண்டு மனமிரங்கிய ரகு அதற்கு உதவி செய்ய அணுகிய போது, அது பயத்தினால் பின் வாங்கியது.

உடனே அவன் அதைப் பார்த்து, "கிளியே! என்னைப் பார்த்து பயப்பட வேண்டாம்.

உனக்கு உதவி செய்யவே நான் வந்துள்ளேன்.

உன்னை என் வீட்டிற்கு அழைத்துச் சென்று, சிகிச்சை அளிப்பேன்.

நீ குணமானதும் உன்னைப் பழையபடி சுதந்திரமாகப் பறக்க அனுமதிப்பேன்!" என்றான்.

அவன் சொன்னதன் பொருளை உணர்ந்து கொண்டதால்தானோ, என்னவோ! அவன் அதைக் கையிலெடுத்துத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றபோது, கிளி தப்பிக்க முயலவில்லை.

வீட்டையடைந்த ரகு, தன் பெற்றோரின் உதவியுடன் கிளியின் காயத்திற்கு கட்டுப் போட்டு, உணவும் அளித்தான்.

பின்னர் அதை ஒரு கூண்டில் அடைத்து தன் தோட்டத்தில் இருந்த ஒரு மரத்தின் கிளையில் தொங்கவிட்டான்.

ஒரு சில வாரத்திற்குள் குணமாகிவிட்டது. அதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்த ரகு, தான் கிளிக்குத் தந்த ஒரு வாக்குறுதியை மட்டும் மறந்துவிட்டான்.

அதை விடுதலை செய்யவில்லை.

கூண்டிலேயே வைத்து அதனுடன் தினமும் விளையாடிப் பொழுது போக்கினான். இவ்வாறு ஓராண்டு காலஞ்சென்றது.

எந்த தினத்தன்று அவன் கிளியை வீட்டிற்குக் கொண்டு வந்தானோ, அதற்குப் பின் ஓராண்டு ஆகிவிட்டதையறிந்த ரகு, அந்த தினத்தைக் கிளியின் பிறந்த தினமாகக் கொண்டாட விரும்பினான்.

தன்னுடைய விருப்பத்தைப் பெற்றோருக்குத் தெரிவித்தபோது, அவர்களும் அதற்கு சம்மதித்தனர்.................. (தொடரும்)

05.2014
07

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1697 - சுவீடனில் ஸ்டொக்ஹோம் நகரின் பழம் பெரும் அரச மாளிகை தீயில் அழிந்தது.
- 1895 - ரஷ்ய அறிவியலாளர் அலெக்சாண்டர் பப்போவ உலகின் முதலாவது வானொலிக் கருவியை சென் பீட்டர்ஸ்பேர்க்கில் அறிமுகப்படுத்தினார். இந்நாள் ரஷ்யாவில் வானொலி தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- 1920 - போலந்துப் படைகள் உக்ரேனின் கீவ் நகரைத் தாக்கிக்கைப்பற்றின. இவர்கள் ஒரு மாதத்தின் பின்னர் செம்படைகளினால் வெளியேற்றப்பட்டனர்.
- 1920 - சோவியத் ரஷ்யா ஜோர்ஜியாவை அங்கீகரித்தது. ஆனாலும் ஆறு மாதத்தின் பின்னர் அது ஜோர்ஜியாவைக் கைப்பற்றியது.
- 1927 - நிக்கராகுவாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் இராணுவத் தளபதி அல்பிரட் யோட்ல் ஜேர்மனியின் நிபந்தனையற்ற சரணடைதலுக்கு பிரான்சில் கையெழுத்திட்டார்.
- 1946 - சோனி நிறுவனம் 20 தொழிலாளர்களுடன் டோக்கியோவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1948 - ஐரோப்பிய அமைப்பு (Council of Europe) உருவாக்கப்பட்டது.
- 1952 - ஒருங்கிணைந்த மின்சுற்று (integrated circuit) தத்துவம் ஜெப்ரி டம்மர் என்பவரால் வெளியிடப்பட்டது.
- 1954 - வியட்நாமில் "தியன் பியன் பு" (Dien Bien Phu) சமரின் போது பிரெஞ்சுப் படைகள் தோற்கடிக்கப்பட்டது.
- 1992 - நாசாவின் என்டெவர் விண்ணோடம் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தது.
- 1999 - கினி-பிசாவுநாட்டில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் நாட்டின் அரசுத் தலைவர் ஜொவாவோ பெர்னார்டோ பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.
- 2007 - உரோமப் பேரரசின் ஹெரோட் மன்னனின் கல்லறை ஜெருசலேம் நகருக்கருகில் கண்டு பிடிக்கப்பட்டது.
- 2007 - முன்னர் இந்தியாவுடன் இணைந்திருந்த சிறிய கண்டம் ஒன்று தெற்குக் கடல்களின் அடியில் தமது ஆய்வுக் கப்பலான போலார்ஸ்டேர்ன் (the Polarstern), கண்டுபிடித்துள்ளதாக ஜேர்மனிய அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.
- 2007 - நாடு கடந்த நிலையில் வாழ்ந்த வங்காளதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா நாடு திரும்பினார்.


### பிறப்புக்கள்

- 1840 - பியோத்தர் த்சாய்க்கோவ்ஸ்கி, ரஷ்ய இசையமைப்பாளர் (இ. 1893)
- **1861 - இரவீந்திரநாத் தாகூர், வங்காள மொழிக் கவிஞர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1941)**
- 1968 - கிருஷ்ணா டாவின்சி, தமிழக எழுத்தாளர், இதழாளர் (இ. 2012)

### இறப்புகள்

- 1825 - அந்தோனியோ சாலியரி, இத்தாலிய இசையறிஞர் (பி. 1750)
- 1964 - பி. கண்ணாம்பா, தமிழ்த்திரைப்பட நடிகை (பி. 1910)
- 1998 - அலன் கோர்மாக், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1924)

## இரவீந்திரநாத் தாகூர்



இரவீந்திரநாத் தாகூர் புகழ் பெற்ற வங்காள மொழிக் கவிஞர் ஆவார். கீதாஞ்சலி என்ற கவிதை தொகுப்பிற்காக இவர் 1913 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றார். இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற முதல் ஆசியர் இவரே ஆவார். இந்தியாவின் தேசிய கீதமான ஜன கணமன பாடலை இயற்றியவரும் இவரே. மக்கள் இவரை அன்புடன் குருதேவ் என்று அழைப்பர். இவருடைய மற்றொரு பாடல் அமர் சோனார் பங்களா வங்காளதேசத்தின் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கொல்கத்தாவைச் சேர்ந்த பிராலிப் பிராமணரான இவர் தனது எட்டாவது வயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கினார். பதினாறாவது வயதில் இவரது முதலாவது குறிப்பிடத்தக்க கவிதையை பானுசிங்கோ (சூரிய சிங்கம்) என்னும் புனை பெயரில் வெளியிட்டார். 1877 ஆம் ஆண்டில் இவரது முதல் சிறுகதையும், நாடகமும் வெளிவந்தன. தாகூர் பிரித்தானிய அரசை எதிர்த்து நாட்டின் விடுதலையை ஆதரித்தார். இவரது முயற்சிகள் இவர் எழுதிய ஏராளமான எழுத்துக்கள் மூலமும், விசுவ பாரதி பல்கலைக்கழகம் என்னும் அவர் நிறுவிய கல்வி நிறுவனத்தின் மூலமும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

கடுமையான செந்நெறி வடிவங்களை விலக்கியதன் மூலம் தாகூர் வங்காளக் கலையில் புதுமைகளை புகுத்தினார். இவரது புதினங்கள், கதைகள், பாடல்கள், நாட்டிய நாடகங்கள், கட்டுரைகள் என்பன அரசியல் தலைப்புக்களையும், தனிப்பட்ட விடயங்களையும் தழுவியிருந்தன. கீதாஞ்சலி, கோரா, காரே பைரே ஆகியவை இவரது பிரபலமான படைப்புகள் ஆகும். இவரது பாடல்கள், சிறுகதைகள், புதினங்கள் ஆகியவை அவற்றின் உணர்ச்சிகளுக்காகவும், மொழிநடைக்காகவும், இயல்புத்தன்மைக்காகவும் பெரிதும் புகழ் பெற்றன.

இவர் பிறந்த வம்சத்தில் பூமகளும் நாமகளும் கூடியே வாழ்ந்தனர். செல்வமும் கல்வியும் இலங்கும் ஒப்பற்ற வம்சம். இவருடைய சகோதரர்களில் ஒருவரான துவேந்திரநாத் உபநிடதங்களைக் கற்ற பண்டிதர். இன்னொருவர் ஓவியக் கலையில் புகழ்பெற்றவர், ஒரு சகோதரர் அரசாங்கத்தில் மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றினார். இவருடைய சகோதரியின் புத்திரர்கள் அபினீந்திர நாதரும், சுகனேந்திர நாதரும் சித்திரக் கலையிலும் சிற்பக் கலையிலும் நாடெங்கும் புகழ் பெற்றவர்கள். இத்தகைய குடும்பத்தில் பிறந்த இரவீந்திரர் இசை, கலை, காவியம் ஆகிய துறைகளில் மிகவும் தேர்ச்சியுடையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...அந்த நெல்லிக்கனியிலிருந்து சுவை மிகுந்த ஒரு விருப்பமான மணம் உண்டாகவே அதனை சுவைத்துப் பார்க்கவும் அவள் விரும்பினாள். அருகிலிருந்த அர்ச்சுனனிடம் தன் விருப்பத்தைத் திரௌபதி தெரிவிக்கவே அர்ச்சுனனும் உடனே அக்கனியைக் கொய்து அவளிடம் தந்தான்.

பிறகுதான் வந்தது வம்பு. அர்ச்சுனன் அபூர்வ நெல்லிக்கனியைப் பறித்து தன் மனைவியிடம் தந்ததைக் கண்ட அங்குள்ள முனிவர்கள் சிலர் திடுக்கிட்டனர். அவர்கள் அர்ச்சுனனிடம், அரசே! என்ன காரியம் செய்து விட்டீர்! இந்தக் கனியானது அருந்தவ முனிவராகிய மித்திர மகா முனிவர் உண்ணுதற்கு உரியது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் இந்த மரத்தில் இப்படி ஓர் அதிசய நெல்லிக்கனி காய்க்கும்.

இரண்டாண்டு பூவாயிருந்து, இரண்டாண்டு காயாகி, இரண்டாண்டு செங்காயாகி, இரண்டாண்டு கனியாகி, இரண்டாண்டு மதுப்பெருக்குற்று இருக்கும் இந்நெல்லிக்கனி மித்திர முனிவர் இம்மரத்தினடியில் வந்து தவமிருக்கும் பொழுது தானே வந்து அவர் கைகளில் விழும். முனிவரும் அதை உண்டுவிட்டு, மறுபடியும் பன்னிரண்டு ஆண்டுகள் கடுமையான தவத்தில் அமர்ந்து விடுவார்.

அப்படிப்பட்ட அருமையான ஒரு கனியை உன் மனைவி கேட்டுவிட்டாள் என்பதற்காக பறித்துக் கொடுத்து பழிக்கு ஆளாகி விட்டீரே என்றனர்.

மித்திர முனிவரின் தவ வலிமையைப் பற்றி அர்ச்சுனன் கேள்விப்பட்டிருந்தானாகையில் அவரது சாபத்திற்காகப் பெரிதும் அஞ்சினான். திரௌபதியும் தன் ஆசை இப்படியொரு விபரீதத்தைத் தோற்றுவித்து விட்டதைக் கண்டு மனம் வருந்தினாள்.



சதுரகிரி மகாலிங்கம்

இதற்கு என்ன பரிகாரம் செய்யலாம்? என்று இருவரும் கலங்கிக் கொண்டிருக்கும் பொழுது தருமர் முதலான மற்ற நான்கு சகோதரர்களும் அங்கு வந்து சேர்ந்தனர்.

நடந்த செய்தியைக் கேட்டு என்ன செய்யலாம் என்று யோசனை செய்து கொண்டிருக்கையில்; சகாதேவன், இந்த இக்கட்டிலிருந்து நம்மைக் காப்பாற்றக் கூடியவர் ஸ்ரீ கிருஷ்ணர் ஒருவர்தான். எனவே அவரை அழைத்து இதற்கான உபாயத்தைக் கேட்போம் என்று தெரிவிக்கவே, அனைவரும் மானசீகமாக கிருஷ்ணரை வேண்டினர்.

பாண்டவர்களின் இக்கட்டான நிலையை உணர்ந்த ஸ்ரீ கிருஷ்ணனும் சத்யபாமாவுடன் அவர்கள் முன் தோன்றி நடந்த விவரங்களை அறிந்தார்.

என்ன கொடிய காரியம் செய்து விட்டீர்கள்? உங்களது விளையாட்டுத்தனமான செய்கையால் பெரியவர்களின் சாபத்திற்கு உள்ளாகி விட்டீர்களே. இப்பொழுது என்ன செய்வது? நான் கடவுளுமல்ல, மந்திரவாதியுமல்ல, மாயா

## ஆன்மீகம் 114

ஜாலத்தால் இந்த நெல்லிக்கனியை ஒட்ட வைப்பதற்கு. ஆனாலும் பெரியவர்கள் சொன்ன பழமொழி ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது.

"உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்"

இது வேத மொழிக்கு நிகரானது. ஆதலால் நீங்கள் ஆறு பேரும் அம்மரத்தின் முன் போய் நின்று உங்களது மனக் கருத்தை பொய் சொல்லாமல் உள்ளவாறு வெளியிடுவீர்களானால் இந்தக் கனி முன்போல மரத்தில் போய் ஒட்டிக் கொள்ளும் என்று நினைக்கிறேன். அதையும் முயற்சித்து பார்த்து விடலாம் என்று நெல்லிக்கனியை தருமராஜன் கையில் கொடுத்து அவரது கருத்தை வெளியிடச் சொன்னார்.

தருமராஜனும் அக்கனியை மரத்தினருகே கொண்டு சென்று தனது இஷ்ட தெய்வமான ஸ்ரீ கிருஷ்ணனை மானசீகமாக வணங்கி, "தருமமும், சத்தியமும், பொறுமையும், இக்கிருஷ்ணனுமே என் சிந்தையில் நினைக்கும் அரும் பொருட்கள்; பழி, பாவம் முதலியவைகள் என் கருத்தில் விலக்கப்பட்ட பொருட்கள்" என்று சொல்ல அந்நெல்லிக்கனியானது தருமனின் கையிலிருந்து இரண்டு முழம் உயர்ந்தது.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன். எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**33**

அந்த அடி நாட்களில்- வடுகபட்டியைத் தாண்டாத வயதில்- கிழிந்துபோன காற்சட்டைப் பைகளில் கனவுகளைச் சேமித்து வந்த காலகட்டங்களில் நான் முக்கியமான சில முடிவுகளை எடுத்திருந்தேன்.

- உலகத்திலேயே சிறந்த புத்தகம் ஈசாப் நீதிக்கதைதான்.
- உலகத்திலேயே அழகான ஆறு வராக நதிதான்.
- உலகத்திலேயே ருசியான பண்டம் வேர்க்கடலை பர்பிதான்.
- உலகத்திலேயே அழகான பெண் மணி இரண்டாம் வகுப்பு டீச்சர்தான்.
- உலகத்திலேயே பணக்காரர் எங்களூரில் தியேட்டர் கட்டிய திருமலை செட்டியார்தான்.
- உலகத்திலேயே இனிமையான பாடகி பி.சுசீலாதான்.

அந்த வயதில் எடுத்த அத்தனை முடிவுகளும் அடுத்தடுத்த வருடங்களில் மாறிவிட்டன.

கடைசி வரை மாறாதிருப்பது நான் கடைசியில் எடுத்த முடிவுதான்.

அன்றும்- நேற்றும்- இன்றும் இந்த நிமிடத்திலும் நான் இருந்தால் நாளையும் நான் ஆராதிக்கும் மெல்லிசைப் பாடகி அம்மா சுசீலா! நீங்கள் தான்!

என் துக்கங்களுக்குப் பக்கத்தில்- என் சந்தோஷங்களின் கூப்பிடு தூரத்தில்- நம்பிக்கை நசிந்து போன பொழுதுகளில்- இன்னும் சொல்லப் போனால் உயிர் பிதுங்கும் சந்தோஷத்தின் உச்ச நிமிஷங்களிலும் கூட- கூடவே வந்து கொண்டிருக்கிறதம்மா உங்கள் குரல்.

உங்கள் குரல் மட்டும் மழையில் நனைந்த காற்றாய் என் செவிகளில் பட்டுச் சில்லிட்டிராவிட்டால் நான் கடந்து வந்த ஒரு பாலைவனப் பிரதேசத்தில் ஈரப்பசையே இல்லாதிருந்திருக்கும்.

உலகம் முழுக்க மனிதனுக்கு இது




ஒரு மோசமான நூற்றாண்டு தாயே!

மனிதன் பிறந்தவுடனேயே வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு மரணம் வரை தேடிக்கொண்டிருக்கிறான்.

உலகப் போரின் வருடங்களிலாவது மனிதனுக்கு வாழ்க்கை எது? வாழ்க்கை அல்லாதது எது என்று தீர்மானிக்கத் தெரிந்திருக்கிறது.

ஒரு காலத்தில் வாழ்க்கையை மனிதன் வாழ்ந்து கொண்டிருந்தான்; இன்று வாழ்க்கை மனிதனை வாழ்ந்து கொண்டிருக்கிறது.

காரணம் பூமியின் அட்ச ரேகைகளிலும் தீர்க்க ரேகைகளிலும் கூட மனிதன் மின்சாரத்தைப் பாய்ச்சி விட்டான்.

விஞ்ஞான உலையில் மனித வாழ்க்கை குமிழிகளாய்க் கொதித்துக் கொண்டிருக்கிறது.

மனிதன் நெருப்பில் உட்கார்ந்து கொண்டு வயலின் வாசிக்கிறான்.

அடுப்பில் அமர்ந்து கொண்டு காதலிக்கிறான்.

கணவனும் மனைவியும் இண்டர்காமில் தாம்பத்யம் நடத்துகிறார்கள்.

குழந்தைக்கு முத்தம் தபாலில் வருகிறது.

காதலிக்கு வாங்கிய மல்லிகைப்பூ டீசல் புகையில் கருகி விடுகிறது.

நவீன வாழ்க்கை என்னும் மாய மானின் பின்னால் வில்லும் இல்லாமல் அம்பும் இல்லாமல் ஊனமுற்ற ராமர்கள் ஓடிக் கொண்டேயிருக்கிறார்கள்.

எழுதினேன் இப்படி; இதயம் புழுங்க எழுதினேன் இப்படி....

"இதயத்தில் என்னென்ன வேட்கை இது

இடைவேளை இல்லாத வாழ்க்கை வாழ்வோடு போராட்டம் இங்கே- இதில்

வாழ்கின்ற நிமிஷங்கள் எங்கே?"



நான் வாழ்கின்ற நிமிஷங்கள் என்று வரையறுத்திருக்கின்ற பொழுதுகளில் நீங்கள்தானம்மா நிறைய நிறைந்திருக்கிறீர்கள்.

எது உயிரை ஊற வைக்கிறதோ- எது உணர்வுகளின் மேற்பரப்பை மயிலிறகால் வருடி விடுகிறதோ- எது தூக்கத்துக்கும் விழிப்புக்கும் மத்தியிலேயே மனசை வைத்திருக்கிறதோ- எது நஷ்டப்படுத்தாத போதையை நல்குகிறதோ- அதுதான் என்னை வாழும் நிமிஷங்களுக்குள் இட்டுச் செல்கிற வாகனம்.

உங்கள் பாடல்கள் நான் சொன்ன அத்தனை அனுபவங்களையும் என்னுள் ஆழப் பதிய வைத்திருக்கின்றன அம்மா!

காதுக்குள் விழுந்த ரத்தத்தில் கலந்து உயிர் தடவும் உங்கள் குரல்.

மனசுக்குள் தேன் பிலிற்றும் உங்கள் அதிர்வுகள்.

உறங்கிக் கிடக்கும் உணர்வுகளை உசுப்பி விட்டு போகும் உங்கள் உச்சரிப்பு...

-வைரமுத்து- (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுத் திறமை கொண்ட 09
# 9 ஆம் எண்காரர்களின் குணாதிசயங்கள்

9,18,27 போன்ற திகதிகளில் பிறந்தவர்களும் இந்த எண்ணில் பெயர் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் 9 ஆம் எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் வருகிறார்கள்.

பிறருக்கு அடங்கி நடக்க விரும்பாத இவர்கள் சுதந்திரமான இயல்புடையவர்களாக இருப்பார்கள்.

எல்லோரிடத்திலும் கடுமையாக நடந்து கொள்ளும் இவர்கள் தாங்கள் காதலிப்பவர்களிடத்திலும் அப்படியே நடந்து கொள்வார்கள்.

ஆனால் அந்த கடுமைக்குள்ளே ஒழிந்து கொண்டிருக்கும் உள்ளன்பானது அவர்களை அடிமைப்படுத்தி விடும். எந்தக் காரியத்தையும் சாதித்துக் கொள்ள இவர்கள் பணத்தை அள்ளி வீசுவார்கள். அதில் வெற்றிபெற முடியாவிட்டால், அதிகாரத்தைப் பயன்படுத்தி தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்வார்கள்.

9 ஆம் எண்காரர்களைப் பற்றி அடுத்தவர்கள் குறை கூறுவதை ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். தங்களைப் பற்றி மிக உயர்வாக எண்ணிக் கொண்டிருக்கும் இவர்கள் தங்களுடைய திட்டங்களில் பிறர் தலையிடுவதை விரும்ப மாட்டார்கள். அதேநேரம் இந்த எண்காரர்களில் சிலர் தவறு செய்கிறவர்களைத்தான் அதிகம் விரும்புவார்கள்.

மற்றைய எண்களின் சங்கமமின்றி தனி எண்ணாகிய 9 ஆம் திகதியில் பிறந்தவர்கள் தான் அரச அதிகாரிகள், பொலிஸ், அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், வியாபாரிகள், தொழில் அதிபர்கள், பெரும் தொழில் அதிபர்களாக இருப்பார்கள்.

அதேபோல் 18, 27ஆம் திகதிகளில் பிறந்தவர்களின் வாழ்க்கை வேறுவிதமாகவே அமைந்திருக்கும். இவர்களைப் பற்றி பிறந்த திகதிப்படி எப்படி இருப்பார்கள் என்று எழுதும் போது குறிப்பிடுகின்றேன்.

இவர்களின் மனதில் எப்போதுமே ஓர் அச்ச உணர்வு வீடு கட்டி அமர்ந்திருக்கும்.

அதாவது நடக்கக்கூடாத காரியங்களை எல்லாம் இவர்களாகவே கற்பனை செய்து கொண்டு, அது அப்படியே நடந்து விடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

இவர்களுக்கு எவ்வளவு பெரிய பதவிகள் கிடைத்தாலும் அதனால் இவர்கள் திருப்தி அடைய மாட்டார்கள். மேலும் பல முயற்சிகளில் ஈடுபடுவார்கள்.

புத்திக் கூர்மையுள்ள இவர்கள் குறுக்கு வழியில் செல்வதற்குத்தான் அதை அதிகம் பயன்படுத்துவார்கள்.

இவர்களை பார்த்து யார் அதிகம் பயப்படுவார்களோ அவர்களிடம் தான் இவர்கள் அதிகம் அன்பு காட்டுவார்கள். பயப்படுவதைப் போல் பாவனை காட்டினால் போதும் அவர்களை தங்கள் அருகிலேயே வைத்துக் கொண்டு அவர்களுக்கு அன்பு காட்டி அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்வார்கள். இப்படிப்பட்ட ஒரு விசித்திரமான குணம் இந்த எண்காரர்களிடத்தில் மட்டும் இருப்பதைக் காணலாம்.

## ஜோதிடக் களம்

கொஞ்சம் சோம்பேறிகளாக இருக்கும் இவர்கள் அதைவிட்டுவிட்டு சுறுசுறுப்பாகச் செயற்பட்டால் வாழ்க்கையில் விரைவாக முன்னுக்கு வருவார்கள்.

இந்த எண்காரர்கள் சிலரிடம் வித்தியாசமான ஒரு குணம் இருக்கும். அதாவது இவர்கள் யார் யாருடன் அதிகம் பழகுகிறார்களோ அவர்களிடம் இருக்கும் தீய பழக்கவழக்கங்களை எல்லாம் இவர்கள் பழகிக் கொண்டு வந்து விடுவார்கள்.

இவர்கள் நல்ல கலைப்படைப்புகளிலும் ஈடுபடுவார்கள். ஆனாலும் கலையைத் தங்கள் தொழிலாகக் கொண்டால் அதில் இவர்கள் வெற்றி பெறுவது என்பது கேள்விக்குறிதான்.

இதனால் தங்களை மதிக்க வேண்டியளவு எவருமே மதிப்பதில்லை என்ற குறை இவர்களின் அடிமனதில் இருந்து கொண்டே இருக்கும். இந்த எண்காரர்கள் எவரையும் எளிதில் நம்பமாட்டார்கள். எல்லோரையும் சந்தேகக் கண்கொண்டே பார்ப்பார்கள். இன்னும் சொல்லப் போனால் இவர்களுக்கு நன்மை செய்ய வருகிறவர்களைக் கூட இவர்கள் தீயவர்களாகவே நினைப்பார்கள்.

டாக்டர்களின் கத்தியோ, ஊசியோ இவர்களின் மேனியில் முத்தமிடவில்லை என்றால் அது உலக அதிசயமாகவே இருக்கும். அதாவது இவர்களுக்கு விபத்துகள் நடந்து அறுவைச் சிகிச்சை நடக்கும் வாய்ப்புகள் நிறையவே உண்டு என்பது தான் இதன் பொருள்.

இதனால், இந்த எண்காரர்கள் வாகனங்கள் ஓட்டும்போது மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

சுறுசுறுப்பாக ஓடிக் கொண்டிருக்கும் இவர்களின் வாழ்க்கை இவர்கள் செய்யும் சில பைத்தியக்காரத்தனமான செயல்களினால் திடீரென்று தடம் மாறிப் போய்விடும். இதனால், சிறிது காலத்திற்கு இவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியாமல் போய்விடும். அப்படி ஒரு இராசி இந்த எண்கர்ரர்களுக்கு உண்டு. இவர்கள் அநேகமாக 18 ஆம் திகதி பிறந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

அமைதியோடு அமர்ந்து சிந்திக்கும் சக்தியை இவர்கள் வளர்த்துக் கொண்டால் இவர்களின் வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.

பேச்சுத் திறமையில் வல்லவராக இருக்கும் இவர்களின் பேச்சில் மயங்கியவர்கள் பின்னர் ஏமாற்றத்திற்கு ஆளாவதும் உண்டு. அதேபோல் இந்த எண்காரர்கள் மிகவும் அவசரப்புத்தியுடைவர்களாகவே இருப்பார்கள். இதனால் சிறிதும் யோசிக்காமல் ஒரு காரியத்தைச் செய்து விட்டு பின்பு வருந்துவார்கள். இதனால் இவர்களால் ஆரம்பிக்கப்படுகின்ற பல காரியங்கள் பாதியிலே நின்று போவதும் உண்டு.

மக்கள் மனதில் அதிருப்தியை உருவாக்கி, கிளர்ச்சிகளையும் உருவாக்கி வரும் அரசியல்வாதிகளுள் பலர் இந்த எண்ணுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பதை நீங்கள் காணலாம்.



வீட்டில் ஜன்னல்கள் இருந்தும் ஏதோ காரணத்தால் மூடியே வைத்திருக்கிறீர்களா? பணப் புழக்கம் குறைய ஆரம்பித்துவிடும். உடனடியாக சில ஜன்னல்களையாவது திறந்து வையுங்கள். பணவரவுக்கு அதுதான் சுலபமான வழி. திறந்த ஜன்னல் அருகில் விலை உயர்ந்த பொருட்களை வைக்காமல் இருக்கிறது புத்திசாலித்தனம். அதையும் ஞாபகம் வையுங்கள்.

இந்த எண்காரர்களுக்கு பகையான எண்கள் 8,2. இதில் 2ஆம் எண்காரர்கள் ஜென்மப் பகையானவர்கள். எக்காரணம் கொண்டும் 9ஆம் எண்காரர்கள் 2 ஆம் எண்காரர்களைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது.

ஜாதகம் பார்த்து எந்த ஜோதிட நிபுணர்கள் சொன்னாலும் இந்த எண்காரர்கள் திருமணம் செய்து கொண்டால் கண்டிப்பாக அது விவாகரத்தில் தான் முடியும்.

இந்த எண்காரர்களில் 18 ஆம் திகதி பிறந்தவர்களின் வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாகவே இருக்கும். ஒவ்வொரு காரியத்திலும் இவர்கள் போராடித்தான் வெற்றிபெற வேண்டும்.

27 ஆம் திகதி பிறந்தவர்களைப் பார்த்தால் ஓர் இடத்தில் நிலையாக இருக்க மாட்டார்கள். வியாபார விடயத்திலும் இவர்கள் தோல்விகளைத் தான் தோளில் போட்டுக் கொண்டு தொட்டதெல்லாம் மண்ணாகிவிட்டதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

இவர்கள் 6,3ஆம் எண்காரர்களைத் திருமணம் செய்து கொள்வதன் மூலம் வாழ்வில் வசந்தத்தை அனுபவிக்கலாம்.

இந்த எண்ணில் பிறப்பது அதிர்ஷ்டம் வாய்ந்தது என்று சொல்லப்பட்டாலும் இவர்கள் இந்த எண்ணை கட்டுப்படுத்த வேண்டும். அதாவது அளவுக்கு மீறிய கோபதாபங்களும் ஆத்திரங்களும். இவர்களை ஆட வைக்க இடம் கொடுக்கக்கூடாது.

இந்த எண்காரர்கள், ஆயுதங்களையோ பயன்படுத்துவதாக இருந்தால் மிகவும் விழிப்புடன் அவற்றைக்கையாள வேண்டும். இல்லையென்றால் பல விபத்துக்கள் ஏற்படவாய்ப்பிருக்கிறது.

இவர்களில் சிலருக்கு தேச சேவையில் நாட்டமிருந்தாலும் சாந்தி, சமாதானம் என்பனவற்றில் அவ்வளவு ஈடுபாடு இருக்காது. இவர்கள் நாட்டுக்காக தியாகம் செய்தாலும் தங்களது போராட்டக் குணத்தை நிறுத்தமாட்டார்கள். அதேநேரம் தோல்விகளையும் கண்டு கலங்க மாட்டார்கள்.

என்னதான் கஷ்டம் வந்தாலும் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இவர்களிடம் நிறையவே உண்டு. சூதும் வாதும் நிறைந்தவர்கள் மத்தியில் தான் இவர்கள் வாழவேண்டிய சூழ்நிலை அமைந்திருக்கும். எதிலும் புதுப்புது யுக்திகள் தோன்றும். இவர்களிடம் சில அபூர்வ சக்திகளும் அமைந்திருப்பதுண்டு.

இவர்களுக்கு எவ்வளவுதான் கஷ்டமும் துன்பமும் வந்தாலும் அதை மற்றவர்களிடத்தில் காட்டிக் கொள்ள மாட்டார்கள். தெய்வம் என்ற ஒன்று உண்டு என்பதை நம்புவார்களே தவிர, கண்மூடித்தனமாக எதையும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். எல்லோருடனும் மரியாதையாக நடந்து அவர்களின் நன்மதிப்புக்கு பாத்திரமாகிக் கொள்வார்கள்.

இவர்களுக்கு உஷ்ண உடம்பு என்பதால் இவர்கள் உணவில் வெங்காயத்தை நிறைய சேர்த்துக் கொள்ள வேண்டும். முடிந்தவரைக்கும் மாமிச உணவு வகைகளை தவிர்த்துக் கொள்வது நன்மை பயக்கும். எண்ணெய் குளியல் என்பது மிகமிக அவசியம்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை


ப்பாசி
(சென்ற வாரத் தொடர்ச்சி)

உடற்பருமன் குறைய முற்றிய பப்பாளிக்காயை கொண்டுவந்து தோலைச்சீவி விட்டு தேவையான அளவு துண்டுகளாக நறுக்கி சமைத்து வாரத்துக்கு இரண்டு முறை சாப்பிட்டு வந்தால் உடற்பருமன் குறையும்.

நீரிழிவு நோயாளிகள் பப்பாளிகள், பப்பாளிக்காயை தோலுடன் நன்கு கழுவிய பின்பு தோலைச் சீவி அதிலிருந்து வடியும் பாலையும் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிய பப்பாளிக்காயையும் கப்பிப் பாலில் சமைத்து உண்ண இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறையும்.

பப்பாளி இலையை அம்மியில் வைத்து மைபோல அரைத்து உடலில் ஏற்படும் கட்டியின் மேல் கனமாக பற்றுப்போட்டு வந்தால் கட்டி பழுத்து உடையும்.

உடலில் எந்தப் பகுதியிலாவது வலி ஏற்பட்டால் பப்பாளி இலையை பொடியாக நறுக்கி சட்டியில் போட்டு இரண்டு தேக்கரண்டியளவு வேப்பெண்ணெய்யை அதில் விட்டு நன்றாக வதக்கி ஒரு துணியில் கொட்டி சூடாக இருக் கும் போதே வலியுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுத்தால் வலி உடனே தணியும்.



ஆறாத புண்களுக்கு பப்பாளி இலையின்மேல் வேப்பெண்ணெய்யை தடவி தணலில் மேல் காண் பித்து துவழ வதக்கி புண்ணின் மேல் வைத்துக் கட்டி வந்தால்ஆறாத புண் ணும் ஆறும். தினசரி காலையில் முன்னர் வைத்த இலையை எடுத்து விட்டு சுத்தம் செய்து புதிய இலையை வைத் துக் கட்டவேண்டும்.

சில குழந்தைகளுக்கு மண்டையில் அக்கி தோன்றி பின்பு மண்டைக் கரப்பான் போன்று பரவிக் காணப்படும். இதற்கு பப்பாளி மரத்துப்பால் மிகவும் பயன்படக்கூடியது. இதற்குப் பரிகாரம் சீனாக்காரத் [illegible] றாக எரியும் தணலில் போட வேண்டும். அது முதலில் தண்ணீர் போல உருகி ஓடும். பிறகு இறுகி நெற்பொரி போல பொரியும். இந்தப் பொரியை பட்டுப்போல தூள் செய்து வைத்துக் கொள்ளவும் வேண்டும்.

பப்பாளி மரத்தின் எந்தப் பகுதியைக் கீறினாலும் அந்த இடத்தில் பால் வரும். பிஞ்சுக்காயை நடுவில் நறுக்கினாலும் பால் வரும். இந்தப் பாலை சேகரித்து ஒரு கிண்ணத்தில் வைத்துக்கொண்டு இந்தத் தூளையும் சேர்த்துக் குழைத்தால் வெண்ணெய் போல வரும். இதை மண்டைக்கரப்பான் மேல் தடவி மறு நாள் கிருமிநாசினி சோப்பைக் கொண்டு சுத்தம் செய்து மறுபடி இதே மருந் தைப் போட படிப்படியாக புண்கள் ஆறிவிடும்.

பப்பாளி மரத்திலுள்ள பிஞ்சுக்காயை குறுக்காக நறுக்கிவிட்டால் பால்வடியும். அந்தப் பாலை ஒரு கண்ணாடிக் கிண்ணத்தில் பிடித்து வைத்துக் கொண்டு ஒரு சட்டியை அடுப்பில் வைத்து அதில் இந்தப் பாலை விட்டுக் காய்ச்சினால் பால் சுண்டி உப்பு போல வரும். உடனே சட்டியை இறக்கி அந்த உப்பை ஒரு சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு காலை, மாலை நெல்லடையளவு (25 மி.கி) சிறிதளவு வெண்ணெய்யுடன் கலந்து சாப்பிட்டால் வயிற்றுப் புண் அதனால் ஏற்படும் வலி தீரும்.

வேனல் கட்டிகள் பருத்துக் காணப்பட்டால் (கோடை காலத்தில்) இதற்கு வெங்காரத்தை நெருப்பில் போட்டு பொரித்து தூள்செய்து வைத்துக் கொண்டு பப்பாளிப் பாலில் போட்டுக் குழைத்து அதன்மேல் தடவி வந்தால் கட்டிகள் பழுத்து உடைந்து ஆறும்.

பப்பாளிப்பாலை தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து தடவ வாய்ப்புண், உதட்டுப் புண் குணமாகும்.

பப்பாளிப் பழத்தை அடிக்கடி சாப்பிட்டுவந்தால் சிறுநீரகக் கல் கரையும்.

பப்பாளிப் பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் மாலைக்கண் நோய் குணமாகும். பப்பாளிப் பழத்தை தினமும் சாப்பிட்டு வந்தால் ஞாபகசக்தி அதிகரிக்கும்.

பப்பாளிப் பழத்தை வெண் குஷ்ட நோய் அறிகுறி உள்ளவர்கள் சாப்பிட்டு வந்தால் குணம் கிடைக்கும்.

பப்பாளிப் பழத்தை முகத்தில் தடவி ஊறவைத்து குளிர்ந்த நீரில் கழுவி வந்தால் கரும்புள்ளிகளும் சுருக்கங்களும் தீரும்.

பப்பாளிக்காயை கீறினால் வெளியாகும் பாலை பல் வலி உள்ள இடத்தில் தடவினால் சிறிது நேரத்தில் இரத்தமும் சீமும் வெளிவரும். பின்பு பல்வலி சரியாகி விடும்.

பப்பாளிப்பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் பித்த சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

பப்பாளி விதையைப் பொடி செய்து பாலில் (2 லீற்றர்) கலந்து குடித்தால் வயிற்றுப்புழுக்கள் அழியும்.

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்,**
**கைதடி.**

பப்பாளி இலைக்கு வெண் குருதி, செங்குருதி, குருதிச் சிறுதட்டுக்கள் என்பவற்றை அதிகரிக்கும் தன்மை இருப்பதால் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் பப்பாசி இலையை குடிநீர் காய்ச்சி 30 தொடக்கம் 60 மில்லி அளவு 6 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை காய்ச்சல் குறையும் வரை அருந்தலாம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்துண்டிப்புக்கான சிவப்பு அறிவித்தல் இனிமேல் இல்லை

மின்சார கட்டணத்தை மாதாந்தம் செலுத்தாத நுகர்வோரின் மின்சார இணைப்பை துண்டிப்பது தொடர்பில் முன்கூட்டியே விடுக்கப்படும் சிவப்பு அறிவித்தலை இனிமேல் விடுக்காமல் இருப்பதற்கு மின்சார சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கு பதிலாக நுகர்வோரின் கையடகக தொலைபேசிக்கு எஸ்.எம்.எஸ் (குறுந்தகவல்) ஊடாக இறுதி அறிவித்தலை விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

எப்படியாயினும் இது தொடர்பில் தொலைபேசி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் பேச்சுவார்த்தையின் நிறைவில் எஸ்.எம்.எஸ் முறைமையை மின்சார நுகர்வோருக்கு அறிமுகம்செய்துவைப்பதற்கு சபை ஆலோசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறைமையின் ஊடாக பெருந்தொகையான நிதியை மீதப்படுத்திகொள்ளலாம் என்றும் சபை அறிவித்துள்ளது. (2)

# சர்வதேசத்தின் நம்பிக்கையை இழக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகின்றது

## தேசிய சமாதான பேரவையின் முன்னாள் தலைவர்

**(கொழும்பு)**

**சர்வதேசத்தின் நம்பிக்கையை இழக்கும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருவதாக தேசிய சமாதானப் பேரவையின் முன்னாள் தலைவர் ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் அண்மையில் 16 புலம்பெயர் தமிழ் அமைப்புக்களையும், 424 தனிப்பட்ட நபர்களையும் தடை செய்திருந்த போதிலும், இதற்கான உரிய நியாயங்களை சர்வதேசத்திடம் அழுத்தமாக முன்வைக்கத் தவறியுள்ளது.

இதன் காரணமாகவே அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் குறித்த அமைப்புக்களையும் தனிப்பட்ட நபர்களையும் தடை செய்யும் இலங்கையின் கோரிக்கையை நிராகரித்துள்ளன.

குறித்த அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருப்பதாகவும், தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்து அரசாங்கம் தடை செய்திருந்தது.

எனினும், இதற்கான ஆதாரங்களை அரசாங்கம் சமர்ப்பிக்கத் தவறியுள்ளது.

ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் பூரணமான விசாரணைகளின் பின்னரே அவற்றை வெளியிட முடியும் எனவும் அரசாங்க பேச்சாளர் அண்மையில் குறிப்பிட்டிருந்ததாகவும், இது நம்பகத் தன்மையை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலம்பெயர் அமைப்புக்களும் தனிப்பட்ட நபர்களும் எவ்வாறு தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்றார்கள் என்பதனை சரியான வகையில் வெளிப்படுத்தாமை அரசாங்கத்தின் நன்மதிப்பிற்கு குந்தகத்தை ஏற்படுத்தும்.

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களை சுமத்தி கைது செய்து தடுத்து வைக்கப்படும் போது சர்வதேச தர நியமங்களை பேண வேண்டியது அவசியமாகின்றது.

அல்லது சர்வதேச ரீதியில் அரசாங்கத்தின் நம்பிக்கை மேலும் வலுவிழக்க அதுவே வழியமைத்து விடும் என்றார். (2)

# மஹிந்த சிந்தனை கொள்கை திட்டம் இல்லாதொழிந்து வருகின்றது

## கயந்த எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

மஹிந்த சிந்தனை கொள்கை திட்டத்தை அரசாங்கம் விரைவில் முழுமையாக வீசி எறிந்துவிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த சிந்தனை மற்றும் மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு என்ற இரண்டு கொள்கைத் திட்டங்களை அரசாங்கம் முன்வைத்துள்ளது.

எனினும், இந்தக் கொள்கைகளின் உள்ளடக்கம் சிறிது சிறிதாக இல்லா தொழிக்கப்பட்டு வருகிறது. இதற்கு அரசாங்கத்தின் இயலாமையே காரணமாகும்.

ஒழுக்க விழுமியங்கள் தொடர்பில் பிரசாரம் செய்து வந்த அரசாங்கம் தற்போது கசினோ சூதாட்டத்தை சட்ட ரீதியாக்கியுள்ளது. நல்லாட்சி மற்றும் சட்டம் ஒழுங்கு தொடர்பில் மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டிருந்த பக்கங்களும் நீக்கப்பட்டுள்ளன.

பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம் பெற்று வருவதனால் நல்லாட்சி பற்றி குறிப்பிட வாய்ப்பில்லை. எனவே விரைவில் மஹிந்த சிந்தனை கொள்கைத் திட்டம் முற்று முழுதாக இல்லாமல் செய்யப்பட உள்ளது.

யுத்தம் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் மக்கள் பெரும் நெருக்கடிகளை அனுபவித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# வேலைநிறுத்தத்தை கைவிட்டு கடமைக்கு திரும்பினர் தாதியர்

(கொழும்பு)

வேலை நிறுத்தத்தை கைவிட்டு நேற்று காலை முதல் கடமைக்குத் திரும்பியுள்ளதாக அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கம் அறிவித்தது. மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதைக் கருத்திற் கொண்டு வேலை நிறுத்தத்தை தற்காலிகமாகக் கைவிட முடிவு செய்ததாக சங்க பிரசார செயலாளர் ஜயந்த விமலசிறி தெரிவித்தார்.

தாதிமார்களுக்கு வழங்கப்பட்ட மகப்பேற்று அறை பயிற்சி தொடர்பில் சர்ச்சையை அடுத்து கடந்த 3 ஆம் திகதி முதல் தாதிமார்கள் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணபதற்காக திறைசேரி செயலாளரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினூடாக ஒரு வார காலத்தினுள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அவற்றினால் மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட நேரிடும்.

அமைச்சுடன் எந்த நிமிடமும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளோம். இறுதியாக நடந்த பேச்சில் சுகாதார அமைச்சு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சில முன்னெடுப்புகளுக்கு தயாரானது.

ஆனால் மருத்துவர்கள் சங்கம் நிர்வாக விடயத்தில் தலையீடு செய்து முடிவு எடுக்க முனைந்ததால் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன என்றார். (2)

# இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு தடைவிதியுங்கள் - இந்து மக்கள் கட்சி

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சென்னையில் விளையாடுவதற்கு தடைவிதிக்க வேண்டும் என்று இந்து மக்கள் கட்சியின் சென்னை மண்டல பொதுச்செயலாளர் வீரமாணிக்கம் எஸ்.எஸ்.சிவா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கை அரசாங்கத்தின் மீது இந்திய அரசு பொருளாதார தடை விதிக்க வேண்டும் என வலியுறுத்தி தமிழக சட்டமன்றத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றினார்.

ஆனால் தமிழக மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாத மத்திய அரசு இதுவரை இலங்கை அரசு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சென்ற ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல், கிரிக்கெட் விளையாட்டு போட்டிகளில் தமிழகத்தில் விளையாடும் எந்த அணியிலும் இலங்கை வீரர்கள் இணைந்து விளையாட தமிழக அரசு தடைவிதித்தது. ஆயினும் தமிழர்களுக்கு எதிராக தொடர்ந்தும் இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில் சென்னையில் ஐ.பி.எல், போட்டிகள் நடைபெற உள்ளன. அவ்வாறு சென்னையில் நடக்கும் அனைத்து போட்டிகளிலும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் விளையாட தடைவிதிக்க வேண்டுமென தமிழக அரசை இந்து மக்கள் கட்சி சார்பாக கேட்டுக்கொள்கிறோம் என அதில் கோரப்பட்டுள்ளது. (2)

# கனேடிய வாழ் தமிழ் சமூகம் நாடோடிகள்

## அஸ்வர் எம்.பி.சாடல்



கனேடிய வாழ் புலம்பெயர் தமிழ் சமூகத்தை நாடோடிகள் என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம், அஸ்வர் சாடியுள்ளார்.

நாடோடிகளுக்கு கனேடிய புலம் பெயர் தமிழர்களுக்கும் இடையில் ஒரே வித்தியாசம் தான் காணப்படுகின்றது. நாடோடிகளிடம் பணமில்லை, கனேடிய புலம்பெயர் தமிழர்களிடம் பணம் உள்ளது.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன், இலங்கை வாழ் தமிழர்களுக்கு நிகரானவர்கள் உலகம் முழுவதிலும் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்திருந்தார்.

அதில் அதிகளவானர்கள் கனடாவில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் சிலர் அந்நாட்டு அரச நிர்வாகத்துடனும் தொடர்பு கொண்டிருக்கின்றனர்.

இதனால் தமிழர்களின் கோரிக் கைக்கு ஏற்ப புலிகளுக்கு கனடா சட்ட ரீதியாக அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.


கனேடிய தமிழர்கள் இலங்கை வாழ் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கவலைப்பட்டதில்லை. புலம்பெயர் என்ற பெயரில் பல தமிழ் அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன.

போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக அஸ்வர் தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் தொடர்புடைய அமைப்புக்களை தடை செய்ய முடியாது என கனடா அறிவித்தமை தொடர்பில் சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அஸ்வர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம் காணுமா இந்தியாவின் அணுகுமுறை?



இலங்கை அரசாங்கம் ஒரு அதிகாரப்பகிர்வு திட்டத்துக்கு இணங்காமல் இந்தியாவினால் எதையும் செய்யமுடியாது. எனவே, கொழும்பை இணங்க வைத்தல் என்பதே இந்தியாவினது வெளிவிவகாரக் கொள்கையின் முக்கியமான சவாலாக இருக்கும்.

அரசியல் தீர்வு ஒன்றுக்கு, அதிகாரப் பகிர்வு ஒன்றுக்கு, கொழும்பு இணங்கிவிட்டால், அடுத்த இந்தியாவினது வெளிவிவகாரக் கொள்கைகளை சுலபமாகவே கையாண்டுவிடலாம். அத்தகைய நிலை ஏற்பட்டால், அடுத்தகட்டத்தில் சீனாவும், பாகிஸ்தானும் இலங்கையில் செல்வாக்கிழந்து விடக்கூடும்.

எனவே, இந்தியாவினது வெளிவிவகாரக் கொள்கை என்பது, இலங்கையிலுள்ள தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய முடியும். அதனை விலத்தியதான ஒரு கொள்கையை இந்தியா வகுக்க முயன்றால் தோல்வியடையப்போவது இந்தியாதான்.

ஏனென்றால் தமிழர் பிரச்சினையை வைத்து சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் கொழும்பை தமது கைக்குள் போட்டு வைக்கவே முனையும். அத்தகைய நிலையில், இந்தியாவுக்கு சரியான இடம் கிடைக்காது. எனவே, புதுடில்லியின் புதிய அரசு இலங்கை தொடர்பான வெளிவிவகாரக் கொள்கையை மறுசீரமைக்கும்போது தமிழர் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை முதன்மைப் படுத்தியாக வேண்டும். இல்லாது போனால் வெளிவிவகாரக் கொள்கை மறுசீரமைப்பு அர்த்த மற்றுப்போகும்..... இதன் விரிவு....

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் பெரும்பாலும் முடிவுக்கு வந்து விட்டது. எஞ்சியுள்ள தொகுதிகளிலும் தேர்தல் முடிந்த பின்னர், வரும் 16 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்படும். இந்த தேர்தலில் நிச்சயமாக ஆட்சி மாற்றம் நிகழும் என்பதற்கான அறிகுறிகளே வெளிப்படுகின்றன. கருத்துக்கணிப்புகள் எல்லாமே பா.ஜ.க. ஆட்சிக்கு வரும் என்றே கூறுகின்றன. பத்து ஆண்டு கால காங்கிரஸ் கூட்டணி ஆட்சி இந்திய மக்களைப் பெரிதும் சலிப்படைய வைத்து விட்டது. இந்தக் காலகட்டத்தை திறமையற்ற ஆட்சி என்று கூறும் நிலைக்கு மக்கள் வந்துள்ள கட்டத்தில், புதிய அரசாங்கத்துக்கு பல சவால்கள் உள்ளேயும் வெளியேயும் காத்திருக்கின்றன.

இந்தியாவினது பொருளாதாரத்தை சீரமைப்பது தொடக்கம் பல்வேறு நெருக்கடிகளுக்கு புதிய அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டியிருக்கும். அதுபோலவே, வெளிவிவகாரக் கொள்கை ரீதியாகவும் இந்தியா சவால்களை எதிர்கொண்டுள்ளது. குறிப்பாக, இலங்கை போன்ற அயல்நாடுகள் விவகாரத்தில் இந்தியாவினது கொள்கைகள் தோல்வியடைந்துவிட்டதாகவே பா.ஜ.க. கூறி வருகிறது.

இந்தநிலையில், பா.ஜ.க. ஆட்சியமைத்தால், காங்கிரஸ் கூட்டணி அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கையில் இருந்துவிலகி, புதியதொரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயம்.

ஏனென்றால், தற்போதைய அரசின் அணுகுமுறைகளை விமர்சித்துவிட்டு, அதே கொள்கையை பா.ஜ.க. பின்பற்றினால்,, கடும் விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும். இந்தியாவினது வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றங்கள் செய்யப்படும்போது குறிப்பாக இலங்கையுடனான உறவுகள் குறித்து அதிகம் கரிசனை கொள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால், இந்தியாவுக்கு மிகவும் அருகில் உள்ள சின்னஞ்சிறிய நாடாக இலங்கை இருந்த போதிலும் இதனை இந்தியாவுக்கு சவாலான சக்திகள் பயன்படுத்திக் கொள்வது அதிகரித்துள்ளது.

குறிப்பாக, சீனா, பாகிஸ்தான் போன்ற இந்தியாவுக்குச் சவால் விடும் நாடுகள் எல்லாமே, இலங்கையைத் தமது கைக்குள் போட்டுக்கொண்டு செயற்படுகின்றன. இது இந்தியாவுக்கு மிகவும் இக்கட்டான நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதுமட்டுமன்றி இந்தியாவினது கருத்துக்களை இலங்கை கணக்கில் எடுப்பதுமில்லை. இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளைக் காப்பாற்ற இலங்கை நடவடிக்கைஎடுக்கவுமில்லை. இந்த நிலையில் இலங்கையை மீண்டும் வழிப்படுத்தும் வகையில் அமைந்த ஒரு வெளிவிவகாரக் கொள்கையை இந்தியா கடைப்பிடிக்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவளிக்காமல் இந்தியா நடுநிலை வகித்தது. இது தற்போதைய அரசாங்கத்தின் உச்சக்கட்டப் பிறழ்வாகக் கருதலாம். முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவினால் அரசியல் வழிப்படுத்தப்பட்ட காங்கிரஸ் அரசாங்கம், அவரது கொள்கையையே குழிதோண்டிப் புதைத்த நிகழ்வு அது.

அராஜகங்கள் இடம்பெறும்போது அல்லது மனித உரிமைகள் மீறப்படும் போது நாங்கள் நடுநிலையைப் பேணமுடியாது. பேணமாட்டோம் என்று நேரு ஒரு முறை கூறியிருந்ததாக, மூத்த ஊடகவியலாளர் குல்தீப் நய்யார் MAINSTREAM என்ற வார இதழில் அண்மையில் எழுதியிருந்த கட்டுரை ஒன்றில் கூறியிருந்தார். ஆனால், இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் இந்தியா, நடுநிலை வகித்ததன் மூலம், நேருவின் கொள்கையை உதறித் தள்ளிவிட்டது என்பதே அவரது கருத்தாக இருந்தது.

அதாவது, இலங்கையுடன் ஒட்டி உறவாடி, இந்தியாவினது நலனை அடையும் உத்தியை சவுத் புளொக் கையாளப் போகிறது என்பதையே ஜெனிவா வாக்கெடுப்பு வெளிப்படுத்தியது. ஆனால், இலங்கை அரசாங்கமோ, சீனாவினதும், பாகிஸ்தானினதும்,`செல்வாக்கிற்கு உட்பட்டுள்ள நிலையில், எவ்வாறு கொழும்புடன் தந்திரோபாயமிக்க உறவை இந்தியா வளர்த்துக் கொள்ளப் போகிறது என்பது கேள்விக்குரிய விடயமாக உள்ளது.

அதாவது, இலங்கையுடன் முரண்போக்கை வளர்த்துக் கொள்ளாமலும், அதேவேளை, அதனுடன் ஒட்டிக் கொள்ளவும் முடியாத நிலையிலும்தான் சவுத் புளொக்கை விட்டுச் செல்லப் போகிறது தற்போது ஆட்சியில் உள்ள மன்மோகன் சிங் அரசாங்கம். அடுத்து வரப்போகின்ற அரசாங்கம், இலங்கையுடன் எத்தகைய உறவை பேணிக் கொள்வது என்று தீர்மானித்து, அதற்கேற்ற அணுகுமுறைகளை வகுத்துச் செயற்படும் வரையில், இருதரப்பு உறவுகளில் பெரியளவிலான முன்னேற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

என்றாலும், இப்போதைய நிலையில் உலகில் நண்பர்களைத் தொலைத்து, ஓரங்கட்டப்பட்டு வருகின்ற இலங்கை அரசாங்கம், எப்படியாவது இந்தியாவைத் தனது கைக்குள் போட்டுக் கொள்ள முனையலாம். ஏற்கனவே நரேந்திரமோடி ஆட்சிக்கு வந்தால், அந்த அரசுடன் இணைந்து செயற்படுவோம் என்று அரசாங்கம் கூறியுள்ளது. ஆனால், அது காங்கிரஸ் அரசுடனான உறவு போல, அது துரிதமாகவும் இலகுவாகவும் இடம் பெறுவதற்கு வாய்ப்பில்லை. ஆனாலும், சுப்பிரமணியம் சுவாமி போன்ற தரகர்களை வைத்து இலங்கை அரசாங்கம் பா.ஜ.கவின் அதிகார மட்டத்தை அசைத்துப் பார்க்க முனையலாம்.

பா.ஜ.க. அரசமைத்தால், அதன் நாடாளுமன்ற பலம் எந்தளவுக்கு இருக்கும் என்பதும்கூட இலங்கை தொடர்பான அதன் கொள்கை விவகாரத்தில் முக்கிய பங்கை வகிக்கும். காரணம், தமிழ்நாட்டின் முக்கிய கட்சிகளினது ஆதரவை தேடும் நிலையில் பா.ஜ.க. இருக்குமேயானால், இலங்கை அரசுடன் கடும்போக்குடன் செயற்பட வேண்டிய நிலை புதுடில்லிக்கு ஏற்படலாம்.

பா.ஜ.கவே தனித்து அரசமைக்கும் நிலை ஏற்பட்டால், கொழும்பு தொடர்பான புதுடில்லியின் போக்கு அவ்வளவு கடுமையானதாக இருக்க வாய்ப்புகள் குறைவே. அதேவேளை, இலங்கையில் தமிழர்கள் தனிநாடு அமைப்பதற்கு ஆதரவு தரமாட்டோம் என்று பா.ஜ.க. தெளிவாகவே கூறிவிட்டது. தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை அங்கீகரித்தால், காஷ்மீர் கைவிட்டுப் போய்விடும் என்ற பயம் காங்கிரசைப் போலவே பா.ஜ.கவுக்கும் உள்ளது. ஆனால், இன்றுள்ள நிலையில் இலங்கைத் தமிழர்கள், தனிநாட்டைப் பிரித்துத் தருமாறு கோரவும் இல்லை. அதனை இந்தியாவிடம் இருந்து எதிர்பார்க்கவுமில்லை. அது இந்தியாவினால் மட்டுமன்றி இன்றைய உலகின் எந்த சக்தியாலும் நடக்கப் போகின்ற காரியமாகவும் தெரியவில்லை.

பா.ஜ.க. அரசாங்கத்தின் மூலம் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு ஏற்பாடு செய்து கொள்ளப்படுவதையே இங்குள்ள தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர். அந்த அதிகாரப் பகிர்வுக்கு பா.ஜ.க. எந்தளவுக்கு ஒத்துழைக்கும் என்று தெரியவில்லை. அதுமட்டுமன்றி, இது ஒரு பக்கத்தினால் நடக்கக் கூடிய காரியமும் அல்ல.

இலங்கை அரசாங்கமும் இணங்கியாக வேண்டும். இலங்கை அரசாங்கம் ஒரு அதிகாரப் பகிர்வுத் திட்டத்துக்கு இணங்காமல் இந்தியாவினால் எதையும் செய்ய முடியாது. எனவே, கொழும்பை இணங்க வைத்தல் என்பதே இந்தியாவினது வெளிவிவகாரக் கொள்கையின் முக்கியமான சவாலாக இருக்கும். அரசியல் தீர்வு ஒன்றுக்கு, அதிகாரப் பகிர்வு ஒன்றுக்கு, கொழும்பு இணங்கிவிட்டால், அடுத்து இந்தியாவினது வெளிவிவகாரக் கொள்கைகளை சுலபமாகவே கையாண்டுவிடலாம். அத்தகைய நிலை ஏற்பட்டால், அடுத்தகட்டத்தில் சீனாவும், பாகிஸ்தானும் இலங்கையில் செல்வாக்கிழந்து விடக்கூடும்.

எனவே, இந்தியாவினது வெளிவிவகாரக் கொள்கை என்பது, இலங்கையிலுள்ள தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய முடியும். அதனை விலக்கியதான ஒரு கொள்கையை இந்தியா வகுக்க முயன்றால் தோல்வியடையப் போவது இந்தியாதான்.

ஏனென்றால், தமிழர் பிரச்சினையை வைத்து, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் கொழும்பை தமது கைக்குள் போட்டு வைக்கவே முனையும். அத்தகைய நிலையில், இந்தியாவுக்கு சரியான இடம்கிடைக்காது. எனவே, புதுடில்லியின் புதிய அரசு இலங்கை தொடர்பான வெளிவிவகாரக் கொள்கையை மறுசீரமைக்கும்போது, தமிழர் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை முதன்மைப்படுத்தியாக வேண்டும். இல்லாது போனால், வெளிவிவகாரக் கொள்கை மறுசீரமைப்பு அர்த்தமற்றுப் போகும்.

-தொல்காப்பியன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க ஆட்சி மாற்றமே சிறந்தது- மங்கள

**தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்விற்கு சர்வதேசத்தை நம்பியிருப்பதை விடவும் ஆட்சி மாற்றத்திற்கு துணை நிற்பதே சிறந்ததாகும். இனப் பிரச்சினைக்கான தீர்வு எம்மிடமே உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு சர்வதேசத்தை நாடுவது பயனளிக்குமா என்பது தொடர்பாக அவர் கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

அரசாங்கம் நாட்டின் இனப் பிரச்சினையினை ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது. அதற்காகவே இனவாதத்தை தூண்டும் அமைப்புகளை அரசாங்கமே உருவாக்கியுள்ளது

நாட்டில் தற்போது இனவாதப் பிரிவினை தூண்டப்படுகின்றது. வடக்கில் தமிழர்கள் நிம்மதியில்லாத வாழ்க்கையினை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கிழக்கில் முஸ்லிம்களும் தெற்கில் சிங்களவர்களும் இதேபோல் சிக்கலான வாழக்கையினையே வாழ்கினறனர்.

இன்று யுத்தம் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு எந்தவொரு விடிவும் வரவில்லை.

விடுதலைப்புலிகள் உருவாகின்றனர் என்ற பெயரில் இன்னமும் வடக்கில் உள்ள தமிழ் மக்களை கட்டுப்படுத்தியே வைத்துள்ளனர். அத்துமீறிய இராணுவ பிரசன்னம், விசாரணைகள் என தமிழ் மக்களின் நிம்மதி சீரழிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

தமிழர்களுக்கு இந்த அரசாங்கத்தினால் தீர்வு கிடைக்கவில்லையெனின் சர்வதேசத்தை நாடுவதில் தவறில்லை. அதேபோல் சர்வதேசத்தை நாடி தீர்வு காண்பதே இருக்கும் ஒரே வழியாகும். அதையே தற்போது தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் செய்து வருகின்றனர்.

ஆனால், சர்வதேசத்தை நாடும அதேவேளை, இலங்கயில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த துணை நிற்பது தமிழ் மக்களின் பிரச்சினை களுக்கு தீர்வுகாண இலகுவான வழி முறையாக அமையும். இந்த அரசாங்கத்தை கவிழ்த்து மூவின மக்களையும் பிரதிபலிக்கும் பொதுவானதொரு கட்சி ஆட்சியமைக்குமாயின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வினைக் கண்டுவிடலாம்.

எனவே. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஏனைய சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இம்முறை ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டால் நாம் எமது பிரச்சினைகளை இங்கேயே தீர்த்துக் கொள்ள முடியும்.

அரசாங்கம் இன்று இனப் பிரச்சினையினையே ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றது. மூவின மக்களிடமும் இனவாதத்தினைப் பரப்பி முரண்பாடுகளுக்கு மத்தியில் இனவாத ஆட்சியினை நடத்தி வருகின்றது.

இதற்குக் காரணமாகவே மதவாதத்தைத் தூண்டும் வகையில் இனவாத மற்றும் மதவாத அமைப்புக்களை அரசாங்கமே ஆரம்பித்து வைத்துள்ளது.

சிறுபான்மை மக்களை அடக்குமுறைக்குள் உட்படுத்தி, அவர்களின் உரிமையினைப் பறித்து பேரினவாத சக்தியாக இருக்கவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்புகின்றார். இதன் விளைவே தற்போது வடக்கில் தமிழ் மக்கள் இராணுவ கட்டுப்பாட்டின் கீழும் ஏனைய பகுதிகளில் முஸ்லிம் மக்கள் ஒரு சில பெளத்த இனவாத அமைப்புகளுக்கு அஞ்சியும் செயற்பட வேண்டிய நிலை உருவாககப்பட்டுள்ளது.

சிங்கள மக்களும் தமது சுதந்திரத்தினையும் உரிமைகளையும் இழந்து விட்டனர். தெற்கிலும் இராணுவ நடமாட்டம் அதிகரித்துவிட்டது. எனவே நாட்டில் விடுதலையினை ஏற்படுத்தி எதிர்கால மக்கள் சந்ததியினரையாவது காப்பாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

உயிர் என்பது தமிழர்களுக்கு வேறு சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களுக்கு வேறு என பிரிவில்லை. அனைத்து மக்களும் நிம்மதியுடன் வாழ வேண்டும். எனவே, அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து புதிய அரசாங்கத்தை உருவாக்க ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (2)

# நாட்டுக்காக போராடும் இராணுவத்தை அமெரிக்கா கவனிப்பதில்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

அமெரிக்கா தனது நாட்டுக்காக போராடும் இராணுவத்தினரையும் ஓய்வுபெற்ற படையினரையும் நன்றாக கவனிப்பதில்லை என இராணுவம் தெரிவித்துள்ளது.

கொழும்பு நாரஹேன்பிட்டியில் புதிய இராணுவ மருத்துமனையை திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயாரத் நாயக்க இதனை கூறியுள்ளார்.

அமெரிக்கா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை தனது போர் வீரர்களுக்கு மிக சிறந்த பாதுகாப்பை வழங்கி வருகிறது.

அமெரிக்கா போருக்கு அதிகளவில் பணத்தை செலவழித்து வருகிறது. ஆனால் போரில் ஈடுபடும் படையினரின் நிலைமைகள் மோசமாக உள்ளன.


அத்துடன் அந்த நாட்டில் ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை பார்க்கும் போது வருத்தமாக உள்ளது.

அண்மையில் அமெரிக்க இராணுவத்தினர் சிலரை சந்தித்து இலங்கையில் இராணுவத்தினருக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்து விளக்கினேன். அப்போது. மறுஜென்மத்தில் இலங்கையில் பிறக்க வேண்டும் என அவர்கள் கூறினர்.

பயங்கரவாதத்தை தோற்கடித்த பின்னர் ஓய்வுபெற்ற இராணுவத்தினருக்கும் சிறந்த நலன்புரி சேவைகள் வழங்கப்படுகின்றன என்றார்.

கொழும்பு நாராஹேன்பிட்டியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் திறந்து வைத்த இராணுவ மருத்துமனையில் ஆயிரத்து 24 இராணுவத்தினர் தங்கி சிகிச்சை பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் ஆயிரம் இராணுவத்தினர் மற்றும் அவர்களின் உறவினர்கள் வெளிவாரியாக சிகிச்சை பெறவும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (2)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் யோகபுரம் மகா வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி கற்கும் வ.சாரங்கனுக்கு மடிக் கணனியை வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன் – நாகரஞ்சினி வழங்கிவைப்பதை படத்தில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## தேடல்

ஒருத்தருக்கு கடவுளைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. அதற்கு என்னென்னமோ பண்ணிப் பார்த்தார். ஒன்றும் சரியாக வரவில்லை. அந்த சமயம் பார்த்து ஆதிசங்கரர் அந்த ஊருக்கு வந்தார்.

இவர் உடனே அவரிடம் சென்று, ''நான் கடவுளைப் பார்க்க வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்லுங்க'' என்றார்.

அதற்கு அவர்'' நீ தனிமையான இடத்தில் உட்கார்ந்து இறைவனை நினைத்து தியானம் செய். கடவுள் காட்சி கொடுப்பார்'' என்றார்.

உடனே இவர் ஒரு காட்டுக்குப் போனார். கண்ணை முடி உட்கார்ந்து தியானம் செய்ய ஆரம்பித்தார்.

''ஏய்... யார்நீ... இங்கே என்ன செய்கிறாய்? '' என்று ஒரு குரல் கேட்டது. இவர் கண்ணைத்திறந்து பார்த்தார்.

பக்கத்தில் ஒரு வேடன் நின்று கொண்டிருந்தான். அவன் மறுபடியும் கேட்டான்.

''இங்கே என்ன செய்கிறாய்?'' என்றான்.

''நான் இறைவனைத் தேடி தியானம் செய்து கொண்டிருக்கிறேன் '' என்றார்.

''இறைவனா? அது எப்படி இருக்கும்? சிங்கம்,புலி கரடி மாதிரி இருக்குமா? எப்படி இருக்கும் சொல்? எனக்குத் தெரியாமல் இந்தக் காட்டில் எதுவும் இல்லை. நீ விபரத்தைச் சொல். நான் பிடித்துக் கொண்டு வருகிறேன். ''என்றார்.

அவருக்கு சங்கடமாகி விட்டது.

''இவன்... விபரம் தெரியாத ஆளாக இருக்கிறான். தியானத்துக்கு வேறு இடைஞ்சலாக இருக்கிறான். இவனுடைய தொந்தரவிலிருந்து எப்படி மீளுவது? '' என்று யோசித்தார்.

உடனே அவனிடம் சொன்னார். ''இதோ பாரப்பா... இறைவன் எப்படி இருப்பார் என்று கேட்டாய் அல்லவா? அதன் தலை சிங்கம் மாதிரி இருக்கும் உடம்பு மனிதன் மாதிரி இருக்கும். அதாவது மனித உடம்பில் சிங்கத்தின் தலை! எங்கேயிருந்தாலும் பார்த்துக் கொண்டுவா'' என்றார்.

சரி கொண்டு வருகிறேன் என்று சொல்லி அவன் புறப்பட்டான். காலையில் புறப்பட்டவன் காடு பூராகவும் தேடியலைந்தான். மாலையாகிவிட்டது.

மிகவும் களைத்துப் போய்விட்டான்.

''நான் இந்தக் காட்டுக்கு ராஜா! என்னாலேயே கண்டுபிடிக்க முடியவில்லையே... இதன் பிறகும் நான் உயிரோடிருக்க வேண்டுமா? '' என்று யோசித்தான்.

உடனே அங்கேயிருந்த ஒரு கொடியைப் பறித்தான். அதை தூக்கக்கயிறு போல் ஒரு மரத்தில் கட்டினான். தற்கொலை செய்து கொள்வதற்காக அதில் கொண்டு போய் தலையை விட்டான். அந்த நேரம் பார்த்து பக்கத்தில் இருந்த ஒரு புதிரில் இலேசாக ஒரு சலசலப்பு.

என்னவென்று திரும்பிப் பார்த்தால் அங்கே ஒரு உருவம் நின்று கொண்டிருந்தது. அதற்கு மனித உடம்பு. சிங்கத்துடைய தலை.

''அடா உன்னைத் தானே இவ்வளவு நேரமாக தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்று இறங்கி ஓடிவந்தான்.

அதை அந்தக் கொடியால் சுற்றிக் கட்டிக் இழுத்துக் கொண்டு அந்தப் பெரியவரிடம் வந்தான்.

''இதோ பார்... நீ சொன்ன மிருகத்தை கொண்டு வந்து விட்டேன்'' என்றான்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. கண்ணைத் திறந்து பார்த்தார். அந்தரத்தில் அந்தக் கொடி ஏதோ ஒரு உருவத்தை சுற்றியிருப்பது தெரிந்தது. உடனே வந்திருப்பது இறைவன் தான் என்று புரிந்து கொண்டார். அந்தத் திசையை நோக்கி வணங்கினார்.

''இறைவா! இங்கே நான் உன்னை நினைத்து தியானம் செய்து கொண்டிருக்கிறேன். என்னை விட்டு விட்டு இந்த உயிரைக் கொல்லுகிற வேடனுக்கு காட்சி கொடுத்திருக்கிறாயே. இது நியாயமா?'' என்றார். அப்போது அசரீரியாக அந்தக் குரல் கேட்டது. இறைவன் சொன்னார்.

''நீ என்னையே நினைத்தாலும் உன்னுடைய முழுமனதும் என்னிடம் வரவில்லை. ஆனால் இந்த வேடன் காலையிலிருந்து மாலை வரைக்கும் என்னை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தான்.

தண்ணீர் கூட குடிக்காமல் முழுமனதுடன் என்னைத் தேடினான். இதுதான் உண்மையான தேடல்! அதனால் தான் அவனுக்கு காட்சி கொடுத்தேன்'' என்றார்.

இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்... எந்த ஒரு ''உண்மையை''தேடினாலும் அப்படித் தேடுவது உண்மையான தேடலாக இருக்க வேண்டும் என்பதுதான்.

திருவிழா நடந்து கொண்டிருந்தது. அதிக சனக்கூட்டம் ஒரு பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலி திருட்டுப் போய்விட்டது. திருடனை எல்லோரும் தீவிரமாக தேடிக் கொண்டிருந்தார்கள்.

மும்முரமாக தேடிக் கொண்டிருந்த ஒருவர் சொன்னார்.எவ்வளவு தான் உண்மையாக தேடினால் கூட அந்தத் திருடன் கிடைக்கமாட்டான் என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

''எப்படிச் சொல்றீங்க''என்று கேட்டார் பக்கத்திலிருந்தவர். அவர் காதோடு காதாக இவர் சொன்னார். '' இப்பொழுது நாமெல்லாம் தேடிக் கொண்டிருக்கிறது என்னைத்தான் '' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் க.வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை; 23 ஆயிரத்து 555 மாணவர்களின் கல்வி பாதிப்பு

(மல்லாவி)

மன்னார் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் 200இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதாகவும் இதனால் இவ்வலயத்தின் கீழுள்ள 92 பாடசாலைகளில் கல்வி பயிலும் 23 ஆயிரத்து 555 மாணவர்களின் கல்வி நிலை பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்வதாக மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.முஹமட் சியான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் கல்வி வலயத்தில் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு அவற்றில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உயர்தர பிரிவுகளில் கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளுக்கு மொத்தம் 115 ஆசிரியர்கள் தேவையாகவுள்ளனர்.

இவற்றைவிட இடைநிலை பிரிவில் விஞ்ஞானம்,கணிதம், வரலாறு, ஆங்கிலம் உட்பட ஏனைய பாடங்களிற்குமாக 85 ஆசிரியர்கள் பற்றாக் குறையாகவுள்ளனர்.

அத்தோடு, மக்கள் மீள்குடியேற்றத்தின் பின் புதிதாக ஆரம்பிக்கப் பட்ட மன்/மறிச்சுக்கட்டி முஸ்லிம் வித்தியாலயம், மன்/முள்ளிக்குளம் அ.த.க. பாடசாலை, மன்/காமேஸ் நகர் அ.த.க. பாடசாலை, மன்/காயாக்குளி அ.த.க.பாடசாலை உட்பட 9 பாட சாலைகளுக்குரிய கட்டட வசதிகள், மலசலகூட வசதிகள், குடிநீர்வசதிகள் என்பனவும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

இவற்றில் அநேக பாடசாலைகளில் அதிபரும் ஒரு சில ஆசிரியர்களும் மட்டுமே கடமையாற்றுகின்றார் கள்.

இந்நிலையில் மிகுதி ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குரிய 76 ஆசிரியர்கள் இங்குள்ள 5 தேசிய பாடசாலைகளில் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களை மாகாண பாடசாலைகளுக்கு மாற்றுவதற்கு முயற்சித்த போதும் தேசிய பாடசாலைகளுக்கு அரசால் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால் இவர்களின் இடமாற் றம் இழுபறியில் உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இன்னும் முசலி பிரதேசம் உட்பட சில இடங்களில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமையினால் மன்னார் கல்வி வலயத்திற்குரிய மாணவர்கள் 8 ஆயிரத்து 200 பேர் புத்தளம் மாவட்டத்திலுள்ள 6 பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர்.

இவர்களுக்கு மன்னார் கல்வி வலயத்திற்குரிய 160 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர்.

இந்நிலையில் குறித்த பிரதே சங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுமாயின் இம் மாணவர்களையும் ஆசிரியர்களையும் மன்னார் கல்வி வலயத்துடன் இணைத்துக் கொள்ள முடியும் என்றார். (9-15)

# வீதி பெயர்ப்பலகைகளை மறைத்து விளம்பரங்கள் ஒட்டப்படுகின்றன

(குருமன்காடு)

வவுனியா நகர்ப்பகுதியிலுள்ள வீதிகளின் பெயர்ப்பலகையில் விளம்பரங்கள் ஒட்டப்படுவதால் பொது மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நகர்ப்பகுதியில் உள்ள வீதியின் பெயர்களை மக்கள் அறிந்து கொள்ளும் நோக்கோடு நகரசபை அனுமதியுடன் தனியார் நிறுவனங்கள்




பெயர்ப்பலகையை அமைத்திருந்தன.

இப் பெயர்ப் பலகையில் அண்மைக்காலமாக தனியார் கல்வி நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களும் தமது விளம்பரங்களை ஒட்டி வருவதனால் வீதிகளின் பெயர்களை அறிந்து கொள்வதில் மக்கள் பல இடையூறுகளை சந்தித்து வருகின்றனர்.

இதேவேளை நகரசபையின் அனுமதி பெறறு வீதி பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்ட போதிலும் அதில் விளம்பரங்களை ஒட்டுவோர் மீது நகரசபை நடவடிக்கை எடுக்காத காரணத்தாலேயே இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதாக சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (9-250)

# வவுனிக்குளத்தில் நீர் மட்டம் உயர விவசாயிகள் பிரார்த்தனை

(மல்லாவி)

தற்போது பெய்யும் மழை மூலம் முல்லை.மாவட்டத்திலுள்ள வவுனிக் குளத்தின் நீர் மட்டம் அதிகரிக்க வேண்டுமென ஆலயங்களில் விசேட பூஜைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனிக்குளத்தை நம்பி 2 ஆயிரம் குடும்பங்கள் ஆறாயிரம் ஏக்கருக்கு மேல் காலபோக நெற்செய்கையை மேற்கொள்வது வழமை.

இதே வேளை சிறு போகத்தினை இம்முறை மேற்கொள் வதற்கு விவசாயிகள் எதிர் பார்த்திருந்த நிலையில் குளத்தின் நீர் மட்டம் 7 அடியாக காணப்பட்டது.

இதனால் செய்கையை மேற்கொள்ள முடியாமல் போய் விடுமோ என விவசாயிகள் மத்தியில் அச்சம் நிலவியது.

இந்நிலையில் தற்போது பெய்து கொண்டிருக்கும் மழையினால் குளத்தின் நீர் மட்டம் 2 1/2 அடியாக உயர்ந்துள்ளது. சிறுபோக நெற் செய்கையை இரண்டாயிரம் குடும்பங்களும் 1/4 ஏக்கர் காணி வீதம் 500 ஏக்கர் நிலத்தில் செய்கையை மேற்கொள்ள 12 1/2 அடி நீர் மட்டம் தேவையாகவுள்ளது.

எனவே தான் இன்னும் 3 அடி நீர் குளத்திற்கு வர வேண்டுமென ஆலயங்களில் விசேட வழிபாடுகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(9-15)

# வீதிகளில் பார்த்தீனியம் எரிப்பு; மக்களின் இயல்பு நிலை பாதிப்பு



(குருமன்காடு)

வவுனியாவின் சில பகுதிகளில் வெட்டப்படுகின்ற பார்த்தீனியச் செடிகளை வீதியின் அருகில் போட்டுஎரிப்பதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை வவுனியா கலைமகள் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள மின்சார சபை விடுதியானது துப்புரவாக்கப்பட்ட போது வெட்டப்பட்ட பார்த்தீனியச் செடிகளும் இலை,குழைகளும் மன்னார் வீதியோரத்தில் மாலை 5 மணியளவில் எரிக்கப்பட்டது.

இதன் போது அவ் வீதியில் பயணித்த மாணவர்கள், பயணிகள் எனப் பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். சுமார் அரை மணி நேரத்திற்கு மேலாக கறுப்பு புகை மேல் எழுந்ததால் அப்பகுதி புகை மண்டலமாக காட்சியளித்தது.

எனவே இது தொடர்பில் வவுனியா நகர சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (9-250)



கிளிநொச்சி குமாரசாமிபுரம் கிராம மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக கனடாவிலுள்ள வர்த்தகர்களின் அனுசரணையுடன் அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் ஒழுங்கு படுத்தலின் கீழ் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் மாணவியொருவர் அப்பியாசக் கொப்பிகளை பெற்றுக் கொள்வதையும் கலந்து கொண்ட சிறார்களையும் படங்களில் காணலாம்.

# அரசியல் பழிவாங்கலால் நிர்க்கதியான கன்னாட்டி கிராம மக்களுக்கு உதவுங்கள்



(குருமன்காடு)

மாகாண சபைத் தேர்தலில் அரசியல் கட்சி ஒன்றினை ஆதரித்து வாக்களிக்காமையினால் பழிவாங் கப்பட்ட 57 குடும்பங்கள் மழை வெள்ளத்தினால் இருக்க இடமின்றி நிர்க்கதியான நிலையில் உள்ளதனால் அவர்களுக்கு உதவ முன் வருமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

வவுனியா மாவட்டம் வெண்கலச் செட்டிகுளம பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கன்னாட்டி கிராமத்தினைச் சேர்ந்த 57 குடும்பங்கள் சுழல் காற்றினாலும்மழையினாலும பாதிக்கப் பட்ட நிலையில் இடம் பெயர்ந்துள்ளன.

அந்த மக்களைச் சந்தித்து அவர்களின நிலை தொடர்பில் அறிந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே உறுப்பினர் இவ் அழைப்பை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மள்குடியேற்றக் கிராமமான கன்னாட்டியில் 108 குடும்பங் களைச் சேர்ந்த 337 பேர் வாழ்ந்து வருகின்றனர். மலசல கூட, போக்குவரத்து மற்றும் மின்சாரம் உட்பட எந்தவித அடிப்படை வசதிகளும அற்ற நிலையில் வாழ்ந்து வரு கின்ற இம் மக்கள் மன்னார் ஆயரின் ஏற்பாட்டில் ஜே.ஆர். எஸ். நிறுவத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

மீள்குடியேறிய குறித்த கிராம மக்களுக்கு இந்திய வீட்டுத்திட்டத்திற்கான ஒப்புதல் வழங்கப்பட்டி ருந்த போதிலும் இறுதியில் அது வழங்கப் படாமல் ஆறு ஆண்டுகளாக அந்தக் கிராம மக்கள் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வீசிய சுழல் காற்று மற்றும் அடை மழை காரணமாக 57 குடும்ப ங்கள் இடம்பெயரவேண்டிய நிலை க்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் பத்துக்குடும்பங்களின் தற்காலிக வீடுகளும் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளர்கள் என விசேட வசதிகள் கொடுக்கப்படவேண்டிய இம் மக்கள் பொதுநோக்கு மண்டபத்திலேயே தமது வாழ்க்கையை கழிக்க வேண்டிய அவலம் தொடர்கிறது. 57 குடும்பங்களுக்கும் சிறிய பொதுநோக்கு மண்டபம் உறங்கு வதற்குக்கூடப் போதுமானதாக இல்லை. அதனைவிடவும் அவர்களின் உணவுத் தேவை என்பதும் மிகவும் நெருக்கடி யானதாகவே அமைந்துள்ளது.

இந்த நிலையில் அந்த மக்களுக்கு உடனடியான உணவுத்தேவைகளை நிறைவு செய்வதற்கு பொது அமைப்புக்களும் தொண்டு நிறுவனங்களும் முன்வரவேண்டும்.

இறுதியாக நடைபெற்ற தேர்தலில் அந்தக் கிராம மக்கள, அரசில் பலம் வாய்ந்த அரசியல் கட்சி ஒன்றுக்கு வாக்களிக்காமைக்கு பழிவாங்கும் நோக்கிலேயே அவர்களுக்கான நிரந் தர வீடுகள் வழங்கப்படவில்லை என்று தெரியவந்திருக்கின்றது. அரச அதிகாரிகள் நீதியை நோக்கி தமது பணியினை முன்னெடுக்க வேண்டும் என்றார். (9-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக இளைஞர் மாநாடு நேற்று கோலாகல ஆரம்பம்



இலங்கையில் முதல் தடவையாக நடத்தப்படும் உலக இளைஞர் மாநாடு அம்பாந் தோட்டை மாகம் புர மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று கோலா கலமாக ஆரம்பமாகியது.

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ வினால் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட இம் மாநாட்டில் ஐக்கிய நாடு கள் பொதுச் சபையின் தலை வர் கலாநிதி ஜோன் டபிள்யூ ஆஷி மற்றும் இளைஞர் விவகா ரங்களுக்கான ஐ.நா. செயலாளர் பான் கீ மூனின் விசேட பிரதிநிதி அஹமட் அல்ஹெந்தாவி ஆகி யோர் விசேட பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர்.

15 நாடுகளைச் சேர்ந்த இளை ஞர்விவகார அமைச்சர்கள் இலங்கை வந்தடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான், சீசல்ஸ், பங்களாதேஷ், பல்கேரியா, சீனா, நைஜீரியா, டொங்கா, ரினிடேட், சாம்பியா, பிஜி, நேபாளம், கியூபா, கெபோன், மியன்மார், அல்ஜீரியா போன்ற நாடுகளிலிருந்து பிரதிநிதி கள் பங்கேற்றனர்.

168 நாடுகளைச் சேர்ந்த இளை ஞர் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

உலக இளைஞர் மாநாட்டின் ஆரம்ப வைபவத்தின் போது ஐ. நா. செயலாளர் நாயகம் பான் க மூனின் விசேட பிரதிநிதியாக இலங்கை வந்திருக்கும் அஹமட் அல் ஹெந் தாவி உரையாற்றினார்.

இதனையடுத்து பிரதிநிதிகள் அனைவரும் அம்பாந்தோட்டை யின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி களை பார்வையிட்டனர். இரண் டாவது அமர்வுகள் இன்று கொழும் பில் நடைபெறும்.

குறித்த மாநாட்டில் வெளியிடப் படவுள்ள கொழும்பு பிரகடனத்தின் விடயங்கள் ஐக்கிய நாடுகள் சபை யின் ஊடாக முன்னெடுக்கபபட்டு உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் கொண்டு செல்லப்படவுள்ளது.

விசேடமாக இலங்கையில் ஒவ் வொரு கிராமங்களிலும், இத்திட் டம் எதிர்காலத்தில் முன்னெடுக் கப்படவுள்ளது.

உலகின் முன்னணி இளை ஞர் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வதன் ஊடாக இவர் களுடைய யோசனைகள் அரசு மற்றும் தனியார் துறையின் ஆலோ சனைகளும் பெறப்பட்டு கொழும்பு பிரகடனம் தயாரிக்கப்படவுள்ளது.

இந்த பிரகடனத்தில் எதிர்கால இளைஞர்களுக்குத் தேவையான யோசனைகள் உள்ளடக்கப்படவுள் ளதாக தெரியவருகின்றது. (2)

# இந்திய கடற்படை தளங்கள் மீது தாக்குதல் நடத்த திட்டம்!

## இலங்கையர் கைதானார்

இந்தியாவின் இரண்டு முக்கிய கடற்படைத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டமொன்றை இலங்கையர் ஒருவர் முன்னெடுத்து வந்ததாக தமிழக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவுப் பிரிவின் சார்பில், இலங்கையின் கண்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் கடமையாற்றி வந்தார் என்ற சந்தேகத் தின் பேரில், தமிழக பொலிஸார் அண்மையில் அவரை கைது செய்தி ருந்தனர். சந்தேக நபரிடம் தொடர்ச்சியாக விசாரணை நடத்த அனு மதி யளிக்குமாறு பொலிஸார் நீதவானிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மாநிலங்களான கொச்சி மற்றும் விசாக பட்டிணம் ஆகிய கடற் படைத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டமொன்றை முன்னெடுத்து வந்ததாக பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர். மேற்படி கடற்படை தளங் கள் பற்றிய தகவல்களை அந்த நபர் திரட்டியதாக குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

துணி வர்த்தகர் என்ற போர்வையில் பல தடவைகள் இந்தியாவிற்கு பயணம் செய்துள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. கடந்த ஆறு மாத காலத்தில் மட்டும் 20 தடவைகள் இவர் இந்தியாவிற்கு பயணம் செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இதேவேளை, பாகிஸ்தான் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளது. (2)

# மத்தள விமானநிலைய அறிக்கை இன்று கையளிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அம்பாந்தோட்டை மத்தள விமான நிலையம் மற்றும் துறைமுகத்திற்கு விஜயம் செய்து மேற்கொண்ட ஆய்வு குறித்த அறிக்கை இன்று புதன்கிழமை வெளியிடப்படவுள்ளது.

குறித்த அறிக்கை ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைமைத்துவச் சபை யின் தலைவர் கருஜயசூரியவிடம் கையளிக்கப்படவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இந்த அறிக்கை வழங்கப்படவிருந்த போதிலும சில காரணங்களினால் அது தாமத மானது.

அறிக்கையில் காணப்பட்ட சில குறைபாடுகள் காரணமாக அதனை குறித்த தினத்தில் வழங்கமுடியாது போனதாக ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு வர் தெரிவித்தார்.

இன்றைய தினம் கட்சியின் தலைமைத்துவச் சபையிடம் வழங் கப்படும் அறிக்கை பின்னர் ஊடகங் களுக்கும் வழங்கப்படும்.

அறிக்கை கையளிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பில் பதிலளிக்க அரசாங் கத்திற்கு ஒருவார காலம் அவகாசம் வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள் ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண் மையில் அம்பாந்தோட்டைக்கு கண் காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண் டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# பிரதேச செயலகங்களின் புதிய கட்டடங்கள் திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வெலிஓயா (மணலாறு), துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலகங்களுக்கான புதிய கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள் ளது.

இதன்படி வெலி ஓயா (மண லாறு) பிரதேச செயலகக் கட்டடம் காலை 8.30 மணிக்கும் துணுக் காய் பிரதேச செயலர் கட்டடம் முற் பகல் 11.30 மணிக்கும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் கட்டடம் பிற்பகல் 2.30மணிக்கும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இத் திறப்பு விழாவில் அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல் கள் அமைச்சர் டபிள்யூ. பி.ஜே. செனவிரட்ன, பிரதி அமைச்சர் விஜய தஹநாயக்க, அமைச்சின் செயலாளர் பி.பி. அபேகோன் ஆகியோர் கலந்து கொண்டு கட்டடங்களை திறந்து வைக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வெலிஓயா (மணலாறு) பிரதேச செயலர் ஸ்ரீமான, துணுக்காய் பிர தேச செயலர் சி.குணபாலன், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் த.பிருந்தாகரன் உள்ளிட்ட பல அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொள் ளவுள்ளனர். (9-267)

# பங்களாதேஷ் பிரஜைகள் பதினேழு பேர் கைதாகினர்

பங்களாதேஷ் பிரஜைகளை இலங்கைக்கு அழைத்து வந்து, லிபியா ஊடாக ஐரோப்பிய நாடுக ளுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக் கையுடன் தொடர்புடைய பங்களா தேஷ் பிரஜை கைது செய்யப்பட் டுள்ளார்.

அவருடன் மேலும் 17 பங்களா தேஷ் பிரஜைகள் அண்மையில் நீர்கொழும்பில் வைத்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் புல னாய்வு பிரிவினரால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

அதேவேளை கடந்த வாரம் கைது செய்யப்பட்ட 48 பங்களாதேஷ் பிரஜைகளில் 13 பேர் நாடு கடத்தப் பட்டுள்ளதாக விசாரணை நடத்தி வரும் அதிகாரி ஒருவர் தெரிவித் தார்.

அதேவேளை இலங்கைக்கு கடத்தி வரப்படும் போதைப் பொருளை இலங்கையில் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்வது, கறுப்பு பணத்தை சட்டவிரோதமாக வெளிநாடுக ளுக்கு அனுப்பி வைப்பது ஆகிய புதிய சட்டவிரோத செயல்கள் ஆட் களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் செயற்பாடுகளுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக புலனாய்வு பிரிவின ருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட 100 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர் கள் மிரிஹானவில் உள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள் ளனர்.

60 பேர் மட்டுமே தடுத்து வைக் கப்படக் கூடிய குறித்த முகாமில் 100இற்கும் மேற்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் அங்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அங்கிருந்த 30 பேர் பூசா முகாமுக்கு மாற்றப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### ராசக்கோண் விக்டர் வென்டர்கோண்

சுண்டுக்குளியை பிறப்பிடமாக வும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்ட ராசக்கோண் விக்டர் வென்டர்கோண் கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் திருப்பலி 10 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு St.Thomas the Apostle Roman Catholic Church, 14 Highgate Drive, Markham, ON, Canada என்னும் முகவரியில் ஒப்புக் கொடுக்கப்படும்.



### தம்பிப்பிள்ளை பசுபதி

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும் வவுனியா குருமன்காடு முதலாம் ஒழுங் கையை தற்காலிக வசிப்பிடமா கவும் கொண்ட தம்பிப்பிள்ளை பசுபதி கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் வவுனியா குருமன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சின்னப்பு சோமசுந்தரம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாக வும் நோர்வேயை வசிப்பிடமாக வும் கொண்ட சின்னப்பு சோம சுந்தரம் (ஓய்வு பெற்ற தபால் தந்தி திணைக்கள மேலதிகாரி) கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு Alfaset, gravlund, Nedre Kalbakkvei 99, 1081 Oslo, Norway என்னும் முக வரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய் யப்படும்.



### தாவிது தேவதாஸ்

நாரந்தனையை(Kayts) பிறப் பிடமாகவும் பிரான்சை வசிப் பிடமாகவும் கொண்ட தாவிது தேவதாஸ் கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் நல் லடக்க ஆராதனை 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஒரு மணிக்கு W.P.M AOG எனும் சபையில் நடை பெற்று பின்னர் பூதவுடல் Cimetiere de Villepinte Route de Trembay என்னும் இடத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### சின்னத்தம்பி சிவராசா

சாவகச்சேரி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவராசா நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நடை பெறும்.



### திருமதி கந்தையா சின்னம்மா

நெடுந்தீவைப் பிறப்பிடமாக வும் 37/48, சேர்பொன் இராம நாதன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னம்மா நேற்று முன்தினம் திங்கட் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவில் ஒக்லஹோமா மாகாணத்தில் உள்ள வனப்பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயால் அங்கு 5 இற்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள தீயணைப்புப்படை வீரர்.

# சரக்கு கப்பல்கள் மோதல்; பதினொரு பேர் மாயம்

(ஹொங்கொங்)

சீன சரக்குக் கப்பலும், மார்ஷல் தீபகற்பத்திற்குச் சொந்தமான சரக்குக் கப்பலும் நேற்றுமுன்தினம் மோதிக் கொண்டதில் சீன கப்பல் கடலில் மூழ்கியது. அதிலிருந்த 11 பேர் மாயமாயினர்.

ஹொங்கொங்கின் கடல் எல்லையில் அமைந்துள்ள போ டோய் தீபகற்பத்திற்கு அருகே இந்த விபத்து நேரிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீனா மற்றும் ஹொங்கொங்கில இருந்து 4 ஹெலிகொப்டர்கள் மற்றும் 20 கப்பல்கள் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தீயணைப்புத் துறை செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,



கடலில் மூழ்கிய சீனக் கப்பலில் 12 பேர் இருந்தனர். அதில், ஒருவர் மட்டும் மீட்கப்பட்டுள்ளார். தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது என்றார்.

மார்ஷல் கப்பலில் பயணித்த மாலுமிகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

ஹொங்கொங் துறைமுகத்திற்கு அதிகளவில் கப்பல்கள் வருவதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, இதுபோன்ற விபத்துகள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

# தாய்லாந்தில் கடும் நிலநடுக்கம்



தாய்லாந்தில் சியாங்ராய் சியாங்மய் ஆகிய மாகாணங்களில் நேற்று காலை கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின.

அதை தொடர்ந்து பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு ஓட்டம் பிடித்தனர். நிலநடுக்கம் காரணமாக பல வீடுகள், கட்டடங்கள் மற்றும் கோவில்கள் சேதம் அடைந்தன.

பல இடங்களில் வீதிகளில் விரிசல் ஏற்பட்டது. சியாங்ராய் மாகாணத்தில் சயங்லிங்காம் என்ற இடத்தில் வீட்டு சுவர் இடிந்து விழுந்தது. அதன் இடிபாடுகளில் சிக்கி 83 வயது பெண பலியானார். 75 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு 6.3 ரிக்டரில் நிலநடுக்கம் பதிவாகி உள்ளது. நிலநடுக்கத்தை தொடர்ந்து சிறிய அளவில் 50 தடவை பூமி அதிர்ந்தது. இதனால் பீதியில் உறைந்த மக்கள் பாதுகாப்பான இடங்களை தேடி ஓடினார்கள். இதனால் பதற்றமும், பரபரப்பும் நிலவியது.

# சொத்து குவிப்பு வழக்கில் ஜெயாவின் மனுவுக்கு இன்று தீர்ப்பு

(பெங்களூர்)

தமிழக முதல்அமைச்சர் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான சொத்து குவிப்பு வழக்கு பெங்களூர் தனிநீதி மன்றில் நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கில் இறுதி வாதம் தொடங்கி நடைபெற்று வருகிறது. அரசு சிறப்பு சட்டத்தரணி பவானி சிங் வாதிட்டு வருகிறார்.

கடந்த வாரம் விசாரணை நடைபெற்றபோது இந்த வழக்கு 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பெங்களூர் தனி நீதிமன்றில் நீதிபதி ஜான் மைக்கேல் குன்கா முன்னிலையில் சொத்து குவிப்பு வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.



அப்போது ஜெயலலிதா சார்பில் ஆஜரான அவரது சட்டத்தரணி குமார் ஒரு மனுவை தாக்கல் செய்தார்.

அதில், மெடோ அக்ரோ பார்ம் உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள் சார்பில் சொத்துகளை விடுவிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீது விசாரணை நடத்தி முடிக்கும் வரை சொத்து குவிப்பு வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சுட்டிக்காட்டி சட்டத்தரணி குமார் தனது தரப்பு வாதத்தை எடுத்து வைத்தார்.

இதற்கு அரசு சிறப்பு சட்டத்தரணி எதிர்ப்பு தெரிவித்தார்.

இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, இந்த மனு மீதான தீர்ப்பை இன்று வழங்குவதாக அறிவித்தார்.

அதைத்தொடர்ந்து அரசு சிறப்பு நீதிபதி பவானிசிங் தனது இறுதி வாதத்தை தொடர்ந்தார்.

# சீன புகையிரத நிலையத்தில் தீவிரவாதிகள் தாக்குதல்

(பிஜீங்)

சீனாவின் யுன்னான் மாகாணத்தின் குன்மிங் புகையிரத நிலையத்துக்குள் கடந்த மாதம் இரு கரங்களிலும் நீளமான வாள்களுடன் நுழைந்த ஒரு கும்பல் கண்ணில் தென்பட்ட நபர்களை எல்லாம் கொடூரமான முறையில் வெட்டி சாய்த்தது.

பீதியுடன் அலறியடித்து ஓடியவர்களை விடாமல் விரட்டிச் சென்ற அந்த கும்பலின் கொலைவெறி தாக்குதலுக்கு 33 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். 143 பேர் படுகாயமடைந்தனர்.

க்சின்ஜியாங் மாகாணத்தை சீனாவில் இருந்து பிரித்து தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்று போராடி வரும் முஸ்லிம் தீவிரவாதிகள் இது போன்ற கோரத் தாக்குதலை ஆங்காங்கே நடத்தி வருகின்றனர்.

உரும்கி புகையிரத நிலையத்தின் உள்ளே கடந்த மாதம் 30 ஆம் திகதியன்று நுழைந்த தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வீசி




திடீர் தாக்குதல் நடத்தினர்.

உயிர் பயத்தில் அலறியடித்து ஓடிய மக்களை வாசலில் நீண்ட வாள்களுடன் நின்றிருந்த தீவிரவாதிகள் மடக்கிப் பிடித்து கண்மூடித் தனமாக வெட்டித் தள்ளினர். இச்சம்பவத்தில் 3 பேர் பலியாகினர். 79 பேர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில், தெற்கு சீனாவின் குவாங்ஸோ புகையிரத நிலையத்தினுள் நேற்று காலை 11 மணியளவில் நுழைந்த தீவிரவாதிகள், புகையிரதத்துக்காக காத்திருந்த 6 பேரை வெட்டி சாய்த்தனர்.

கையில் வாளுடன் தப்பியோட முயன்ற ஒரு தீவிரவாதியை பொலிசார் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த 3 பெண்கள் உட்பட 6 பேர் குவாங்ஸோ அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# நெருப்போடு விளையாட வேண்டாம்; மோடிக்கு மம்தா எச்சரிக்கை

(கொல்கத்தா)

மேற்கு வங்காள மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் பிரசாரம் செய்த திரிணாமூல் காங்கிரஸ் கட்சி தலைவரும், அம்மாநில முதல் அமைச்சருமான மம்தா பானர்ஜி, பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியை கடுமையாக தாக்கி விமர்சித்தார்.

அந்த கூட்டங்களில் மம்தா பேசியதாவது,

நமது மக்களை அகதிகள் என்று கூறி மோடி அவமானப்படுத்துகிறார். சிலரை ஊடுருவியவர்கள் என்றும் குற்றம் சாட்டுகிறார். உங்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்தி, யாரையாவது வெளியேற்ற முயன்றால், உங்களை நான் பாதுகாப்பேன்.

உங்களை யாரும் தொடக்கூட நான் அனுமதிக்க மாட்டேன். அகதிகளுக்கு நான் மரியாதை தருவதாக மோடி கூறுகிறார். யார் அகதி? அகதி என்றால் என்னவென்று அவருக்கு தெரியுமா? 1971 ஆம் ஆண்டுக்கு பிறகு இங்கு



வந்தவர்கள் கூட இந்தியர்கள்தான்.

இது தொடர்பாக இந்திரா-முஜிப் உடன்படிக்கையில் மிக தெளிவாக கூறப்பட்டுள்ளது. இன, நிற கலவரம் தொடர்பாக பேசி வருபவருககு பிரதமராகும் உரிமை இல்லை. தேர்தல் விதிமுறைகளை மீறும் இந்த செயலுக்கு இடுப்பில் கயிற்றை கட்டி அவரை சிறையில் தள்ள வேண்டும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வங்காள தேசத்தில் இருந்து இந்தியாவுக்கு வந்தவர்களை வெளியேற்றுவேன் என்று கூறும் மோடிக்கு தைரியம் இருந்தால் முதலில் என்னை வெளியேற்றட்டும். நெருப்போடு விளையாட வேண்டாம் என்று அவரை எச்சரிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பதில் ஈடுபாடு கொள்ளாத அரசனாக இருப்பதை விட பரண் அறையில் நிறையப் புத்தகங்களுடன் ஏழையாக இருப்பதையே விரும்புவேன்.

-தாமஸ் மெக்காலே

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கல்வி ஒன்றால் மட்டுமே சமூகப் பிறழ்வுகளை மாற்ற முடியும்

கல்வி அழகே அழகு என்கிறது நாலடியார். அழகு என்பது இயற்கை, செயற்கை, கல்வி என்ற மூன்று வகையிலும் ஏற்படக் கூடியது. மூவகை அழகும் ஆபத்தானவை என்பதையும் கூறித்தானாகவேண்டும்.

குற்றாலத்து அருவி கொட்டும் அழகிற்கு அளவேயில்லை. ஆனால் அதுவே சில சந்தர்ப்பங்களில் ஆபத்தாகி விடுகின்றது.

செயற்கை அழகு பேராபத்துக்குரியது. சில சந்தர்ப்பங்களில் இருந்த அழகையும் கெடுத்து விடுகின்ற செயற்கை அழகை பல இடங்களில் காணமுடியும். அதில் ஒன்று பதிவுத்திருமணம் மற்றும் மணப்பந்தலில் மணமகளுக்குச் செய்யப்படுகின்ற செய்கை அழகு.

அட, தங்கையைக் காட்டி அக்காவைச் செய்து விட்டார்களே! என்று மாப்பிள்ளை வீட்டாரை பதறவைக்கிறது.

அந்த அளவிற்கு உள்ளதையும் கெடுக்கின்ற அழகு செயற்கைக்கு உண்டு. இப்போது கல்வி அழகு என்பது முக்கியம் பெறுகிறது. மேற்குறித்த இரண்டு அழகையும் விட, கல்வி அழகு ஆக்கத்தை தரவல்லது. பல சந்தர்ப்பங்களில் அழிவையும் தந்திருக்கிறது. அப்படியானால் அழிவுத்தரக்கூடிய கல்வியை, அழகு என்று எப்படிக் கூறமுடியும்? என்ற கேள்வி எழும்.

இங்குதான் நாலடியார் "... நெஞ்சத்து நல்லம் யாம் எனும் நடுவு நிலைமையால் கல்வி அழகே அழகு" என்றார்.

ஆக, நடுவு நிலைமை தவறாத தர்மத்தை பின்பற்றுகின்ற போதுதான் கல்வி அழகு பெறுகிறது.

நடுவுநிலைமை தவறாத தர்மத்தைப் பின்பற்றுதல் என்பது கற்றதனாலாய பயனாகிய இறைவன் தாள் தொழும் போது சாத்தியப்படுகின்றது.

எனவே, அனைவருக்கும் சமமான கல்வி கிடைக்கும் போது, கற்ற கல்வியால் நடுநிலை என்ற தர்மம் பின்பற்றப்படும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் சமூகப் பிறழ்வுகள் தானாக இல்லாது போகும். எனினும் எங்கள் மத்தியில் இருக்கக்கூடிய கல்வி என்பது ஏற்ற இறக்கமுடையதாக அமைந்து விடுகிறது.

கல்விக்கான வள ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கின்ற சமத்துவமின்மை, பிரபல்யமான பாடசாலைகள், பின்தங்கிய பாடசாலைகள் என்ற பாகுபாட்டைத் தோற்றுவித்து மாணவப் பிஞ்சுகளின் மனங்களில் வக்கிரத்தன்மையையும் வன்மத்தையும் ஏற்படுத்தி விடுகிறது எனலாம்.

கொலை, கொள்ளை, திருட்டு, அடாவடித்தனம், போதைவஸ்து விற்பனையும் பாவனையும் என்ற அக்கிரமங்களுக்குப் பின்னால் கல்விக் குறைபாடு இருக்கின்றது என்ற உண்மையை உள்ளத்தூய்மையோடு நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எனவே எங்கள் மக்கள் சமூகம், அவலமான செய்திகளையும் ஆபத்தான சம்பவங்களையும் முழுமையாகத் தவிர்க்க வேண்டுமாயின் அதற்கான ஒரே ஆயுதம் கல்வி மட்டுமே. இதனால் தான், சீனப்பழமொழி ஒன்று; உடனடியாக வருமானம் கிடைக்க வேண்டுமாயின் மீன் பிடிக்க வேண்டும். மூன்று மாதங்களில் வருமானம் பெற நெல் விதைக்க வேண்டும். நூறு வருடங்கள் நன்மை பெற பனை நாட்ட வேண்டும். சந்ததி சந்ததியாக நன்மை பெற கல்வி கற்க வேண்டும் என்று கூறுகிறது.

ஆகவே, நாமும் கல்வி என்ற ஆயுதத்தின் ஊடாக ஒரு நேர்த்தியான சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட வேண்டும்.

## விபூசிகா தாயாரை சந்திக்க பூஸா முகாமிற்கு சென்றார்

(கிளிநொச்சி)

பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாலேந்திரன் ஜெயக்குமாரியான தனது தாயை பார்ப்பதற்காக அவரது மகளான பாலேந்திரன் விபூசிகா கரைச்சி பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி விஜயகுமாரி சுரேஸ்டன் நேற்று முன்தினம் சென்றார்.

விபூசிகா தனது தாயாரினைப் பார்ப்பதற்கான அனுமதியை கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீனிடம் கடந்த 30ஆம் திகதி கோரி யிருந்தார்.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் மார்ச் 13ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தினையடுத்து, பொலிஸாரால் இவர்கள் இருவரும், மார்ச் 14-ம் திகதி கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன் பிரகாரம் தாயாரான பாலேந்திரன் ஜெயக்குமாரிக்கு (வயது 50) 3 மாதகாலம் தடுப்புக் காவல் விதிக்கப்பட்டு, பூஸா தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டார்.

தொடர்ந்து மகள் விபூசிகா கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை விபூசிகாவின் வழக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, தாயாரினைப் பார்ப்பதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கையினை நீதவான் ஏற்றுக்கொண்டு அனுமதியினை வழங்கினார்.

கரைச்சிப் பிரதேச நன்னடத்தை அதிகாரி இதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டு நேற்று முன்தினம் சிறுமியான விபூசிகாவை அவரது தாயார் சந்திப்பதற்காக பூஸாவுக்கு அழைத்துச் சென்றார். (2)

## தடை செய்யப்பட்டவர்களுக்கான ஆதாரங்கள் தயாராகின்றன

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ள புலம் பெயர்ந்த அமைப்புகள் மற்றும் தனி நபர்களுக்கு எதிரான ஆதாரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை பாதுகாப்பு அமைச்சு தயாரித்து வருகிறது.

இதில் இந்த அமைப்புகளும் தனிநபர்களும் விடுதலைப் புலிகளுடன் கொண்டுள்ள தொடர்புகள் உள்ளிட்ட விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அறிக்கை சர்வதேச நாடுகள் பலவற்றுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்த அமைப்புகள் தடை செய்யப்பட்டமைக்கான காரணத்தை விளக்கப்படுத்தும் வகையிலும் வெளிநாடுகளிலும் இதன் செயற்பாடுகளை முடக்கும் வகையிலும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2)

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

இலங்கையில் ஊடகச் சுதந்திரத்திற்கு தகவல் அறியும் உரிமையை சட்டமாக்க கோருவதை வலியுறுத்தும் மக்கள் மனு கையொப்பமிடும் நிகழ்வு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் மாலை ஆரம்பமாகியது.

உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு ஊடக சுதந்திரத்திற்கான செயற்குழுவின் ஏற்பாட்டில் இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன், ஐ.தே.க. எம்.பி. கருஜயசூரிய, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பி. எம்.ஏ.சுமந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி. லால்காந்த, நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கததின் தலைவர் பேராசிரியர் சந்திர குப்த தேனுவர, காணாமற் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலியகொடவின் மனைவி சந்தியா எக்னெலியகொட ஆகியோர் கையொப்பமிட்டனர். அத்துடன் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் தகவல் பெறும் உரிமையைச் சட்டமாக்குவதை வலியுறுத்தும் இந்த மக்கள் மனு கையொப்பமிடும் செயற்பாடு எதிர்வரும் நாட்களில் நாட்டின் பலபாகங்களிலும் தொடரப்படவுள்ளதாகவும், இலங்கையில் ஊடகசுதந்திரத்தினை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்துவோம் எனவும் ஏற்பாட்டுக்கு குழுவினர் தெரிவித்தனர்.

அத்துடன் இவ் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இவ்வுரிமையை சட்டமாக்குவதற்காக கட்சி பேதமின்றி குரல் கொடுப்பதற்கு தயார் எனவும் குறிப்பிட்டனர். (2)

## பொதுச்சபைக்கூட்டம் இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுமென இலங்கை மின்சார சபையின் வட மாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

தவிர்க்க முடியாத காரணங்களால் இப்பொதுச்சபைக்கூட்டம் நேற்று நடைபெறவில்லை எனவும் அவர் அறிவித்துள்ளார். (2)

## 6600 கைத்தொலைபேசிகள் சிறைச்சாலையில் மீட்பு

(கொழும்பு)

நாட்டில் காணப்படும் சிறைச்சாலைகளில் 6 ஆயிரத்து 600 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையின் அடிப்படையில் 6 ஆயிரத்து 600 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் சீ.பல்லேகம தெரிவித் துள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகளுடன் 4 ஆயிரத்து 323 சார்ஜர்களும் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட பொருட்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சார்ஜர்களின் மொத்த எடை 367 கிலோ கிராம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2)

## சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க அவுஸ் - இலங்கை பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சட்டவிரோத குடியேற்றவாசிகளை தடுக்கும் அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை இடையில் செயற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வேலைத் திட்டம் மற்றும் அது சம்பந்தமான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் எல்லை பாதுகாப்பு நிறுவனத்தின் பிரதான அதிகாரி ரியல் அட்மிரல் மைக்கல் நுனன் மற்றும இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ஜயநாத் கொழம்பகே ஆகியோருக்கிடையிலான இந்த பேச்சுவார்த்தை கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கடற்படை தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது மைக்கல் நுனன் அவுஸ்திரேலிய எல்லை பாதுகாப்பு நிறுவனம் மற்றும் தென் நடவடிக்கைகள் குறித்து விரிவுரை ஒன்றையும் நிகழ்த்தினார். (2)

## பல சேனாக்களுக்கு நீதிமன்று எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுபல சேனா, ஜாதிக பல சேனா ஆகிய இரு அமைப்புகளும் சமயங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் செயற்படக்கூடாது என கொழும்பு கோட்டை பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்தது.

கொழும்பு நிப்பொன் ஹோட்டல் விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிரதான நீதவான் திலின கமகே இவ்வுத்தரவினை பிறப்பித்தார்.

இவ்வழக்கு விசாரணையின் போது பொது பல சேனா அமைப்பின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட நால்வரை தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதித்ததுடன் எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி மீண்டும் மன்றில் ஆஜராகுமாறு பணித்தது. (2)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நம்பிக்கை வேண்டும்



✦ கடவுளிடம் நம்பிக்கை இல்லாததே துன்பத்திற்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

✦ எண்ணத்திற்கும், பேச்சிற்கும் ஒற்றுமை இருந்து விட்டால் போதும். வேறு எந்தச் சாதனையும் தேவையில்லை.

✦ உடலைப் பெற்று விட்ட உயிர்கள் அனைத்திற்கும் இன்பம், துன்பம் வந்தே தீரும்.

✦ முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினைக்கேற்ப இந்த பிறவியில் வாழ்வின் போக்கு அமைகிறது.

✦ பக்தியுடன் கடவுளின் திருநாமத்தைச் சொல்லுங்கள். எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுதலை கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் கழக வி.போட்டி

பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான அனைத்து விளையாட்டுப் போட்டியின் அடிப்படையில் கழுகுகள் இளைஞர் கழகம் 61 புள்ளிகளைப் பெற்று சம்பியனாகியது. (க-23)

# ஸ்டான்லியை வென்றது வித்தியானந்தா





வித்தியானந்தா கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் ஸ்டான்லி கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் இடையிலான 50 ஓவர்களைக்கொண்ட ஒருநாள் போட்டியில் வித்தியானந்தா பழைய மாணவர் அணி 4 இலக்குகளால் அபார வெற்றியீட்டியது.

இப்போட்டியானது கடந்த ஞாயிற்றுக் கிழமை வித்தியானந்த மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்டான்லி பழைய மாணவர் அணி 26.2 பந்துப் பரிமாற்றங்கள் முகம் கொடுத்து 123 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அதிக பட்சமாக அணிசார்பாக சத்தியபிரசன்னா 35 பந்துகளை எதிர்கொண்டு 31 ஓட்டங்களையும் றஜீவ் 25 பந்துகளை எதிர்கொண்டு 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் வித்தியானந்த பழைய மாணவர் அணி சார்பாக நிகாந்தன் 5 பந்துப் பரிமாற்றங்கள் 29 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும் விஜிதரன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் வினோச் 6.2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் தேவா 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் அனுராஜ் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 124 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்னும் இலக்கோடு துடுப்பெடுத்தாடிய வித்தியானந்தா பழையமாணவர் அணி ஜனந்தன், கவி ஆகியோரின் பொறுப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 26.5 பந்துப் பரிமாற்றங்களை எதிர்கொண்டு 126 ஓட்டங்களைப்பெற்று வெற்றியை தமதாக்கிக் கொண்டனர்.

இதில் ஜனந்தன் ஆட்டமிழக்காது 32 பந்துகளை எதிர்கொண்டு 27 ஓட்டங்களையும் அணித்தலைவர் வினோச் 19 பந்துகளை எதிர்கொண்டு 22 ஓட்டங்களையும் அனுராஜ் 23 பந்துகளை எதிர்கொண்டு 18 ஓட்டங்களையும் ஜனோசன் 22 பந்துகளை எதிர்கொண்டு 16 ஓட்டங்களையும் கவி ஆட்டமிழக்காது 9 பந்துகளை எதிர்கொண்டு 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் ஸ்டான்லி பழையமாணவர் அணி சார்பாக சுதர்சன் 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் றஜீவ் 5.5 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வசீகரன் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 39 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் கருணாஸ் 2 பந்துப்பரிமாற்றங்கள் 8 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக ஸ்டான்லி பழைய மாணவர் அணியைச் சேர்ந்த சத்தியபிரசன்னாவும் சிறந்த பந்து வீச்சாளராக வித்தியானந்தா பழைய மாணவர் அணியைச் சேர்ந்த நிகாந்தனும் ஆட்ட நாயகனாக வித்தியானந்தா பழைய மாணவர் அணித் தலைவர் வினோச்சும் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## வதிரி டயமன்ஸ் வெற்றி

இலங்கை உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கத்தினால் நடத்தப்படும் நாற்பது வயதுக்கு மேற்பட்டோருக்கான 6 ஆவது வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த சனிக்கிழமை கரண வாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வவுனியா சீனியர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அகில இலங்கை ரீதியாக 36 கழகங்கள் இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றுகின்றன. யாழ்.மாவட்டத்திலிருந்து பங்கு பற்றும் ஒரேயொரு அணியாக வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக



கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி பிரதேச விளையாட்டு கழகங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் தென்மராட்சி பிரதேச அணிகளை நாளை வியாழக் கிழமைக்கு முன்னர் 077 29 11 259 என்ற தொலைபேசி இலக்கத்துடன் எ.விதுசன் என்பவருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

அணிக்கு 9 பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரி மாற்றங்களை கொண்ட போட்டியாக இது நடைபெறும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக

# ஆண்களுக்கான கபடிப் போட்டி; பருத்தித்துறை விவேகானந்தா சம்பியன்



பருத்தித்துறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கபடிப் போட்டியில் பருத்தித்துறை விவேகானந்தா இளைஞர் கழகம் சம்பியனாகியது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வல்வை இளைஞர் கழக அணியும் விவேகானந்தா இளைஞர் கழக அணியும் மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றன.

இதனால் முதல் செட்டினை விவேகானந்தா இளைஞர் கழகம் கைப்பற்றியது.

2 ஆவது செட்டினைக் கைப்பற்ற வல்வை இளைஞர் கழக அணி கடுமையாகப் போராடிய போதும் 2 ஆவது செட்டினையும் வல்வை இளைஞர் கழக அணி கைப்பற்றியது.

இதனால் இப் போட்டியில் 2:0 என்னும் செட் கணக்கில் விவேகானந்தா இளைஞர் கழக அணி வென்று பருத்தித்துறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகியது. (க-23)








பருததிததுறை பிரதேச இளைஞா கழக சமமேளனததில பதிவு செயயபபடட இளைஞா கழகஙகளுககிடையிலான வருடாநத இளைஞா விளையாடடு விழா அணமையில பருததிததுறை ஹாடலிக கலலூரியில இடமபெறறபோது... (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரை வீழ்த்தி மும்பை அசல் வெற்றி



பெங்களூர் அணிக்கு எதி ரான போட்டியில் மும்பை அணி 19 ஓட்ட ங்களால் வெற்றி பெற்றுள்ளது.

பெங்களூரு அணிக்கு எதி ரான ஐ.பி.எல் லீக் போட்டியில் கப் டன் ரோகித், போலார்ட் விளாச மும்பை அணி 187 ஓட்டங்கள் குவித்தது.

ஏழாவது ஐ.பி.எல் தொடரின், இரண்டாவது கட்ட போட்டிகள் இந்தியாவில் நடக்கின்றன. நேற்று மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த லீக் போட்டியில், மும்பை, பெங்களூரு அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூரு அணி கப்டன் விராட் ஹோலி, முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். பெங்களூரு அணியில் மாற்றம் எதுவுமில்லை. மும்பை அணியில் சாகிர் கானுக்குப் பதில், பவான் சுயல் சேர்க்கப்பட்டார்.

மும்பை அணிக்கு பென் டங் (15), கவுதம் (30) ஓரளவுக்கு கை கொடுத்தனர். ராயுடு (9), கோரி அண்டர்சன் (6) நிலைக்கவில்லை. அதி ரடி காட்டிய போலார்ட் 43 ஓட்டங்கள் எடுத்தார். கப்டன் ரோகித் அரை சதம் கடந்தார். முடிவில், மும்பை அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 187 ஓட்டங்கள் குவித்தது. ரோகித் (59) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பின்னர் 188 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களம் இறங்கிய பெங்களூர் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 168 ஓட்டங்கள் எடுத்து 19 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை அணித்தலைவர் ரோகித் சர்மா தெரிவானார். (க)





# ஐ.பி.எல் போட்டியில் இருந்து முரளிதரன் ஓய்வு



பெங்களூர் அணிக்காக விளையாடும் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இந்த ஐ.பி.எல் தொடர் தான் விளை யாடும் கடைசி தொடராக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் சுழல் வித்தைக்காரர் என அழைக்கப்ப டும் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கடந்த 50 ஓவர் உல கக்கிண்ணத்தில் கடைசியாக விளையாடினார். அதன் பிறகு கிரிக கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் பெங்களூர் றோயல் சேலஞ்சர்ஸ் அணிக்காக விளையாடி வரும் முரளி, 7-வது ஐ.பி.எல் தொடரின் ஒரு போட்டியில் விளையாடியுள்ளார்.

ஐ.பி.எல் தொடரின் மூத்த வீரர்களில் ஒருவரான முரளி இந்த ஐ.பி.எல் 7-வது தொடர் எனக்கு கடைசி தொடராக இருக்கலாம் என்று கூறியுள்ளார். மேலும் அவர் கூறுகையில், ஓய்வு பெற்ற பிறகு சாதிக்க ஒன்றும் இல்லை. இந்திய அணியில் திறமை மிக்க சுழல் பந்து வீச்சா ளர்கள் உள்ளனர். ஹர்பஜன் சிங் மீண்டும் அணியில் விளை யாடுவதன் மூலம் அவரது வழக்கமான விளையாட்டு தொடர வேண்டும்.

மேலும் 11 பேர் கொண்ட அணியில் ஒரே நேரத்தில் இரு சுழல் பந்து வீச்சாளர்கள் இருப்பது சாத்தியமில்லை. ஆனரல் அஸ்வின், ஜடேஜா என இருவரும் கடந்த இரண்டு வருடமாக அசத்தலாக விளையாடி வரு கின்றனர் என்று கூறியுள்ளார். (க)




# சென்னையின் பந்து வீச்சில் முன்னேற்றம் தேவை-தோனி



சென்னை அணி துடுப்பாட்டத்தில் சிறந்து விளங்கினாலும், பந்து வீச்சில் முன்னேற்றம் தேவைப்படுவதாக அணித்தலைவர் தோனி குற்றம் சாட்டியுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி டெல்லியை வீழ்த்தி தொடர்ந்து 6-வது வெற்றியை பெற்றது.

முதலில் விளையாடிய டெல்லி டேர்டெவில்ஸ் 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 178 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் விளையாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் 2 பந்துகள் மீதமுள்ள நிலையில் 2 விக்கெட் இழப்புக்கு 181 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வெற்றி குறித்து சென்னை அணியின் அணித்தலைவர் தோனி கூறுகையில், நாங்கள் மிகவும் சிறப்பாக விளையாடி வருகிறோம். ஆட்ட த்தின் கடைசி 2 அல்லது 3 ஓவர்களில் ஓட்டங்களை அதிகமாக கொடுத்து விட்டோம்.

எங்களது பந்து வீச்சில் முன்னேற்றம் தேவை. கடைசி ஓவர்களில் வீசக்கூடிய சிறந்த வேகப்பந்து வீரர்கள் அணிக்கு தேவைப்படுகிறது. ஸ்மித்தும், மக்கலமும் சிறந்த தொடக்கத்தை கொடுத்தனர்.

ஸ்மித்தின் ஆட்டம் அதிரடியாக இருந்தது. ரெய்னா இதை சரியாக பயன் படுத்தி கடைசி வரை சிறப்பாக விளையாடினார் என்று கூறியுள்ளார். (க)

# அயர்லாந்தை வென்றது இலங்கை

அயர்லாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 79 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு சென்றுள்ள இல ங்கை அணி அதிலொரு கட்டமாக அயர்லாந்து அணியுடன் இரண்டு போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது.

இதன்படி இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நேற்று டப்ளினில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சி யில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடு படத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடு ப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்க ளை இழந்து 219 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இலங்கை அணியின் துடுப்பா ட்டத்தில் குலசேகர 42, சண்டிமல் 39, பிரியன்ஜன் 31, அணித் தலை வர் மத்யூஸ் 30 ஓட்டங்களை எடுத் தனர்.

அயர்லாந்து அணியின் பந்து வீச்சில் ரிம் முரா 2 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினார்.

220 ஓட்டங்களை வெற்றியி லக்காகக் கொண்டு பதிலுக்கு துடு ப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி யால் 39.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

துடுப்பாட்டத்தில் அயர்லாந்து அணி சார்பில் அதிகபட்சமாக அணித் தலைவர் போட்டர்பீல்ட் 37, நெயில் ஓ பிரையன் 33 ஓட்டங்களை எடுத்தனர்.

இலங்கை அணியின் பந்துவீச் சில் மெண்டிஸ், லக்மல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினார்.

போட்டியின் நாயகனாக இலங்கை அணியின் அஜந்த மெண்டிஸ் தெரி வானார். இரு அணிகளுக்கும் இடையிலான 2-வதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி இதே மைதா னத்தில் நாளை ஆரம்பமாகிறது. (க)

## யானையுடன்...

தைச் சென்றடைந்தது.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

நேற்று மதியம் 2.40 மணி க்கு கொழும்பிலிருந்து பளை நோக்கிப் புறப்பட்ட சொகுசு ரயில் சுமார் 8.40 மணியளவில் மாங்குளத்தை வந்தடைந்தது அங்கிருந்து. பளை நோக்கிப் புறப்பட்ட சமயம் பனிச் சன் குளம் பகுதியில் யானை யுடன் மோதி விபத்துக்குள்ளானது. இத னையடுத்து யானை உயிரிழந் ததுடன் ரயில் வெளிச்சம் இல்லா மை காரணமாக தனது பயண த்தை தொடர முடியாத நிலை காணப்பட்டது.

இந் நிலையில் பின் பகுதி ஊடாக மீளவும் மாங்குளத்தை இரவு 10 மணியளவில் ரயில் சென்றடை ந்தது.

அங்கு பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டனர். இதனால் அவர் கள் யாழ்ப்பாணம் வர முடியாத நிலை காணப்பட்டது.

இதேவேளை பளையில் இருந்து கொழும்பு செல்லும் யாழ்தேவி ரயில் 10 மணிக்கு பின்னரே புறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-15)

## பல்கலை...

வித்தார்.

இதேவேளை முள்ளிவாய்க் கால் நினைவு தினமான மே 18 ஆம் திகதி யாழ்.பல்கலையில் நினைவு நிகழ்வு நடைபெற்று விடக் கூடாது என்ற நோக்கிலேயே பல்கலைக்கழகம் மூடப்படுவதாக மாணவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

யாழ்.பல்கலை மூடப்படப் போவதாக வெளியான அறிவித் தலை தொடர்ந்து அங்கு நேற்று முழு வதும் பதற்றநிலையே காணப்பட்டது.

பல்கலைக்கழகம் மூடப்படு வதற்கான அறிவித்தல் பதிவாளரது கையொப்பத்துடனும் பல்கலைக்கழக முத்திரை இன்றியும் பல்கலை வளாகத்தினுள் ஒட்டப்பட்டுள்ளது.

இவ் அறிவித்தலில் 16-ம் திகதி முதல் 20ஆம் திகதிவரை பல் கலைக்கழகம் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அதனை தாம் ஒட்டவில்லை என நிர்வாகம் மறுத்துள்ளது.

இதேவேளை துணைவேந்தரின அறிவித்தலின்படி மாணவர்கள் யாவரும் 13ஆம் திகதி மாலையிலி ருந்து விடுதியிலிருந்து வெளியேறி 20ஆம் திகதி மாலை திரும்ப வேண்டும் எனப் பணிக்கப்பட் டுள்ளனர். (எ-4)

## இராணுவக்...

போன்ற இடங்களில் குடியேறி வாழ்ந்து வருகின்றோம்.

இந்நிலையில் எங்களுடைய சொந்தக்காணியில் பலாலியைச் சேர்ந்த மக்களை குடியேற்ற நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரு வதாக அறிந்துள்ளோம். அந்த காணிகளுக்கு சொந்தமானவர்கள் நலன்புரி நிலையங்களிலும் வேறு இடங்களிலும் குடியேறிவாழ்ந்து வரும் நிலையில் இராணுவத் தினர் பலாலியைச்சேர்ந்த மக் கள்ளை மாதிரிக் கிராமம் அமைத்து குடியேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

எனவே அந்த நடவடிக்கை களை தடுத்து நிறுத்தி எங்களை எங்களுடைய சொந்தக்காணியில் மீள்குடியேற்றுங்கள், எமது மீள் குடியேற்றம் தொடர்பில் பல முறை சகல அரச, அரச சார்பற்ற நிறுவ னங்களிடமும் நாம் கோரிக்கை விடுத்தும் இதுவரை சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே எங்களை எங்கள் சொந்த இடங்களில் உடனடியாக மீள்குடி யேற்றுங்கள் என்று அந்த மகஜரில் வளலாய் வடக்கு மக்கள் கோரி க்கை விடுத்துள்ளனர். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாவடியில்...

பல வகையான வெடிபொருட்கள், குண்டுகள், துப்பாக்கி ரவைகள், வெடிமருந்து, மிதிவெடி மற்றும் கைக்குண்டு என்பன இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் காணியை துப்புரவு செய்யும் போது வெடி பொருட்கள் காணப்பட்டதாகவும் இதனை அடுத்து காணி உரிமையாளர் அப்பகுதி கிராம சேவையாருக்கு தகவல் வழங்கப்பட்டதை. அடுத்து இராணுவத்தினருக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து இராணுவத்தின் பொறியியல் பகுதியினருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது.

1993, 1995 காலப்பகுதியில் குறித்த காணியானது விடுதலைப் புலிகளின் பாவனையில் இருந்ததாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

தாவடி தெற்கு பகுதியில் பாவனையற்ற காணியில் கண்டுபிடிக்கப்பட்ட வெடிபொருட்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் பாவனையில் இருந்த வெடிபொருட்கள் என சந்தேகிக்கப்படுகிறது.

நேற்றையதினம் வல்லைப் பகுதியிலும் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ள அதேவேளை கடந்த வாரம் திருநெல்வேலிப் பகுதியிலும் கைக்குண்டு மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## திருமலையில் நேற்று...

வாழைத்தோட்டம், புண்ணையடி, முட்டுச்சேனை, கல்லடி மற்றும் இலங்கைத்துறை ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக இந்த தேடுதல் இடம் பெற்றதாக பிரதேச தகவல்கள் மூலம் தெரியவருகின்றது.

அதிகாலை 4 மணி தொடக்கம் காலை 6 மணி வரை தங்கள் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு 15 வயதுக்கு மேற்பட்ட ஆண்களை அந்த பகுதியிலுள்ள வழிபாட்டு தலமொன்றில் கூடுமாறு பாதுகாப்புப் படையினரால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

குறிப்பிட்ட இடத்தில் கூடிய பொது மக்களிடம் சந்தேகத்திற்கிடமான நபர்களின் நடமாட்டங்கள் தொடர்பில் விழிப்பாக இருப்பதோடு தகவல் தர வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்திக் கூறப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கிராமங்களை விட்டு எவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கு கூட அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையினால் நண்பகல் வரை பிரதேசத்தின் வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகின்றது.

அதேவேளை இந்த பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பாக இராணுவ தரப்பு வெளியிட்டுள்ள தகவலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் லங்கா பட்டுனா (இலங்கைத்துறை முகத்துவாரம்) கடற்படை முகாமுக்கு அருகாமையில் ரி-56 ரக துப்பாக்கி மற்றும் அதற்கான ரவைகளும் பையொன்றில் போடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னதாக கடற்படை வீரர்கள் நடைப்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, சந்தேகத்திற்கிடமான இருவரது நடமாட்டங்கள் அவதானிக்கப்பட்டு அவர்களை கடற்படை நெருங்க முற்பட்ட வேளை தம்வசம் வைத்திருந்த பையொன்றை வீசிவிட்டு தப்பி ஓடிவிட்டனர்.

அந்த பையிலே குறித்த ரி 56 ரக துப்பாக்கி மற்றும் ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனையடுத்தே இந்த தேடுதல் நடவடிக்கை எனக் கூறப்பட்டுள்ளது.

போருக்கு முன்னர் ஈச்சிலம்பத்தை பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பிரதேசமாகும். போருக்கு பின்னர் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சுற்றிவளைப்பு தேடுதல் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

## தென்னாபிரிக்கத்...

கைக்கான பயணம் மேலும் தாமதமடையக்கூடும் என கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தென்னாபிரிக்காவில் இன்ற புதன்கிழமை இடம்பெறவுள்ள தேர்தலை அடுத்து சிறில் ராமபோசா அமைச்சரவையில் இடம்பெறக் கூடும் என்று ஊகங்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே, கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளன.

அதேவேளை, தென்சூடானில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும் சிறில் ராமபோசாவின் இலங்கைக்கான பயணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

தென்சூடானுக்கான தென்னாபிரிக்காவின் சிறப்புத் தூதுவராகவும் சிறில் ராமபோசா செயற்பட்டு வரும் நிலையில், அங்கு உள்நாட்டுப் போர் தற்போது தீவிரம் பெற்றுள்ளதுடன், இனப்படுகொலை தொடர்பில் அச்சமும் எழுந்துள்ளது. (எ-11)

## மனிதவுரிமைப் பணி...

வழங்கியுள்ளன.

ஆனால், இவ்வமைப்புகளின் வேண்டுகோளை நிராகரித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன் நாம் எதற்கு ஒத்துழைக்க வேண்டும்?

விடுதலைப் புலிகளுடனான போரை எம்மால் வெல்ல முடியாது என்று எல்லோரும் கூறிய போதிலும், பல தியாகங்களைச் செய்து நாம் அப்போரில் வெற்றி பெற்றுள்ளோம். போன்ர முன்னெடுத்துச் சென்றவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நான் நிறுத்துவது இலகுவானது.

அதேவேளை, அதிகாரப் பகிர்வு குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், அதிகாரப்பகிர்வு தொடர்பாக தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளத் தயாராகவே இருக்கிறேன. ஆனால், அதிகாரப் பகிர்வு தொடர்பான முடிவுகள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலமே எடுக்கப்பட வேண்டும்.

கட்சி ரீதியில் முடிவுகளை எடுக்கவோ, நாட்டின் இறைமையை விட்டுக் கொடுக்கவோ, போர் வீரர்களைக் கொலைக்களத்துக்கு அனுப்பவோ நான் தயாராக இல்லை என்று ஜனாதிபதி கூறியதாக இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

## தாழமுக்கம்...

காணப்படும் பொழுது காற்று சற்றுப்பலமானதாக வீசும்.

இந்தத் தாழமுக்கப் பிரதேசம் உருவாக்கம் காரணமாக ஏற்பட்டுள்ள மேகக் கூட்டங்களின் அதிகரிப்பினால் புத்தளம் முதல் கொழும்பு, காலி ஊடான மாத்தறை வரையான கடல் பிராந்தியங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை காணப்படும்.

சாதாரணமாக கடல் பிராந்தியங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 20-40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் வீசும்.

ஆனால் சில சந்தர்ப்பங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 70-80 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் திடீரென அதிகரிப்பதுடன், கடலும் திடீரென சில சந்தர்ப்பத்தில் கொந்தளிப்பாகக் காணப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-6)


மேலும் ஒரு மகத்தான சாதனை. 6 நாட்களின் ஐரோப்பிய நாடுகளிற்கான செங்கன் விசா கிடைத்தது

எமது பரிபூரண சட்ட வழிகாட்டலில்; J/269 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாசிவன் சந்தி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்கின்ற வதிவிட முகவரியாகக் கொண்ட S. சிவகுமார் ஆறே நாட்களில் செங்கன் விசா வென்றுள்ளார்.

இது எமது சட்ட ஆளுமையையும், இத்துறையில் 3 வருடங்களில் எம் வளர்ச்சியையும் வெளிப்படுத்தி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(சி-7292)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090



முதலீட்டாளர் பயிற்சிப் பட்டறை

CSE COLOMBO STOCK EXCHANGE
www.cse.lk

பங்கு முதலீடுகள் அறிமுகம்
நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல்
பங்குகளைத் தெரிவு செய்தல்
முதலீட்டை ஆரம்பித்தல்

2014 மே 10, 17 ஆம் திகதி சனிக்கிழமைகளில்
மு.ப 9.30 – பி.ப 4.30 வரை

பங்குப் பரிவர்த்தனை கேட்போர் கூடம்
147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

பதிவுக் கட்டணம் 500/=

முன்பதிவுகளுக்கு:- 021 222 1455 / 077 7822014

(C-7282)

CCTV CAMERA

Package 1
4Ch AMARON DVR
320GB HDD
2 Bullet CCD Camera (Night Vision)
Free Installation
Free online Setup
2 Year Service free
1 Year Warranty
Rs 36,500 Only

Package 2
4Ch AVTECH DVR
320GB HDD
2 Bullet CCD Camera (Night Vision)
19" Moniter
Free Installation
Free online Setup
2 Year Service free
1 Year Warranty
Rs 49,500 Only

Package 3
4Ch AVTECH DVR
500GB HDD
4 Bullet CCD Camera (Night Vision)
19" Moniter
Free Installation
Free online Setup
2 Year Service free
1 Year Warranty
Rs 67,500 Only

Package 4
8Ch FUHO DVR
1000GB HDD
8 Bullet CCD Camera (Night Vision)
19" Moniter
Free Installation
Free online Setup
2 Year Service free
1 Year Warranty
Rs 114,500 Only



உங்கள் வியாபார நிறுவனங்களை, வீடுகளை மற்றும் சொத்துக்களை 24 மணிநேரமும் பாதுகாக்கும் நோக்குடன்

மேலதிக விபரங்களுக்கு
075 9997798

HOTLINE
021 5 676767
(C-7291)
aj SYSTEMS
Anyplace, Anywhere, Anytime ! Your POS & CCTV Partner
AJ SYSTEMS (PVT) LTD
இல. 315,1/2 பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
Tel : 0212219234 Email: info@aj-sys.lk Web: www.aj-sys.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.